
# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும். அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62:10**

**Translated from**
**BS#946**
**Jan-Feb 2025**

**பொருளடக்கம்**


✡ எச்சரிக்கையாயிரு.......................... 2

✡ யூதர்கள் யூதர்களாகவே நிலைத்து இருக்க வேண்டும்.......................... 11



BS Tamil Version - 91 2025

# எச்சரிக்கையாயிரு

Take Heed

## 2025 - சட்ட வாக்கியம்

**“நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக் கொண்டு, இவைகளிலே நிலைத்திரு” – 1 தீமோ. 4:15**

இந்த பாடத்தின் பின்னணி சூழலானது சங்கீதக்காரனால் உருவாக்கப்பட்டுள்ளது. **“வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான், உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால் தானே”** (சங். 119:9 லீசர்). சங்கீதக்காரன் பதிலை பரிந்துரைக்கும் நோக்கத்திற்காகவே கேள்வியை எழுப்புகிறார். அவருடைய பதில் நம்முடைய கர்த்தருடைய ஜெபத்துடன் பூரண இசைவுடன் இருக்கிறது. அவர்கள் உலகத்திலிருந்து வெளியே எடுக்கப்பட வேண்டும் என்பதல்ல, ஆனால் அவர்கள் தீமையிலிருந்து விலகி இருந்து, ஒரு வாலிபன் தன் ஜீவியத்தின் போக்கை சுத்தமாக காத்துக் கொள்வதற்கான ஒரே வழி, அவன் கர்த்தருடைய வார்த்தைக்கு செவி கொடுக்க கவனமாயிருப்பதே என்று தெரிவிக்கிறது. அப்போஸ்தலராகிய பவுலும் சொல்லுகிறபடி, வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப் பட்டிருக்கிறது. கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே ஒருவனை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாகத் தக்கதாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.

வேத வாக்கியங்கள் அறிவிக்காத சில காரியங்கள் என்னவெனில் மனிதர்கள் ஜீவியத்தின் வெற்றி என்று எதை அழைக்கிறார்களோ, அதை அடையும் பொருட்டு, பிரதிஷ்டை செய்த கிறிஸ்தவன் எப்படி கிறிஸ்துவின் ஆவி மற்றும் வழிமுறைகளை, உலகத்தின் ஆவி மற்றும் வழிமுறைகளோடு கலக்கச் செய்ய முடியும் என்பதாகும். அவைகள் நிதி, அரசியல் அல்லது சமூகம் சார்ந்த வெற்றிக்கு வழியைத் திறக்கவில்லை. ஆனால் அவைகள், நாம் அவபக்தியையும், லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும், நீதியும், தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி நாம் நம்பியிருக்கிற (சுவிசேஷத்தைப் பற்றி) ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும், நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்கு போதிக்கிறது. அவர் நம்மை சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், (இந்த உலகத்தக்குரியவைகளின் பின்னே




அலைகிற ஜனங்களாக அல்ல, ஆனால்) நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி நமக்காக தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார் (தீத்து 2:12-14). ஆம், கிறிஸ்துவைப் பின்பற்றுகிற வாலிபன் தற்கால ஜீவியத்தின் குறிக்கோள்களையும், இன்பங்களையும் கைவிட்டுவிட்டு, வரப்போகிற ஜீவியத்தின் நீடித்திருப்பதும், திருப்தி தருகிறதுமான ஐசுவரியங்களுக்காக வாழ வேண்டும்.

ஆயினும், ஞானத்தினாலும் ஆலோசனையினாலும் நிறைந்துள்ள கர்த்தருடைய வார்த்தையானது, சாந்தம் மற்றும் ஜெபத்தின் ஆவியோடும், நீதியின் போதனைக்காக அதன் பக்கங்களிடம் வராத பிரதிஷ்டை செய்த கிறிஸ்தவனுக்கும் கூட பலனளிப்பதில்லை. அதோடு கூட கர்த்தருடைய வார்த்தை, அதன் கட்டளைகளைத் தியானிக்க தவறுகிற கவனக்குறைவான வாசகருக்கு பலனளிப்பதில்லை; அல்லது எப்போதாவது சுயாதீன பிரமாணமாகிய பூரண பிரமாணத்தை உற்றுப் பார்த்து தன்னைத்தானே பார்த்துக் கொண்டு, அவ்விடம் விட்டுப் போனவுடனே தன் சாயல் இன்னதென்பதை மறந்து விடுகிறவனாக இருக்கிறவன் (யாக். 1:22-24) அதனிமித்தம், போதனையை ஏற்றுக் கொண்டு பயன்படுத்த தவறுகிறவனாயிருப்பதால், அவனுக்கு பலனளிப்பதில்லை. ஆனால் தேவனுடைய உபதேசங்கள் அடங்கிய புஸ்தகத்தைப் படிக்கிற மாணாக்கர்கள், நிச்சயமாகவே, உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன் (நான் என்னுடைய குணாதிசயங்களை

COURTESY BY :
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor, Leon Snyder.** Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates: One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** www.biblestandard.com




**உன்னுடைய உணர்வுகளைவிட உன்னுடைய மனதை பலம் வாய்ந்ததாக இருக்கும்படி பயிற்சி செய்; அதனை நேர்மறையாக இருக்கும்படி பயிற்சி செய், உன்னுடைய சரீரம் அதனை பின்பற்றும்!**

கட்டியெழுப்ப அவைகளை விடாமுயற்சியுடன் பயன்படுத்திக் கொண்டேன்), மேலும் உமது வார்த்தைகள் எனக்கு சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்து; இரவும், பகலும், அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிறேன். உம்முடைய கிரிகைளையெல்லாம் தியானித்து, உம்முடைய செயல்களை யோசிப்பேன் என்றேன்; உமது கட்டளைகளைத் தியானித்து உமது வழிகளைக் கண்ணோக்குகிறேன். உமது பிரமாணங்களில் மனமகிழ்ச்சியாயிருக்கிறேன்; உமது வசனத்தை மறவேன்; (எரே. 15:16; சங். 1:2; 77:12; 119:15,16). இவர்களே, இவர்கள் மட்டுமே கர்த்தருடைய வார்த்தைக்கு கவனமாக செவி சாய்ப்பதன் மூலம் தங்களுடைய நடைகளை சரியாக ஒழுங்குபடுத்துகின்றனர்.

இதுவே, பவுல் தீமோத்தேயுவுக்கு பரிந்துரைத்த பாதையாயிருந்தது. அதாவது உலகத்தால் அசுசிப்படுதலிலிருந்து தன்னைத் தூய்மையாக காத்துக் கொள்ளவும், மற்றவர்களுக்கு உதாரணமாகவும், உண்மையுள்ள ஊழியக்காரனாயிருக்கவும் கூடிய அளவில், "**...நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு.... நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக் கொண்டு, இவைகளிலே நிலைத்திரு.**" (1 தீமோ. 4:12,15).

வழிமுறைகள் பயன்படுத்தப்படாவிட்டால், பலன்கள் நிச்சயமாகவே கிடைக்காது, சரியான ஏற்ற நிலைமைகளின் கீழ் அல்லாமல், வேறு எவ்விதத்திலும் குணாதிசயம் முதிர்ச்சியடையாது; மேலும் குணாம்சம் குறைவுபடும் இடத்தில் அல்லது அதற்கேற்ற விகிதத்தில் வளர்ச்சியடையாதிருக்கையில், ஊழியம் மட்டும் பெருகினால், அந்த அவலம் எவ்வளவு வருந்தத்தக்கதாகவும், அத்துடன் ஒவ்வொரு பகுத்தறியும் பரிசுத்தவானுக்கும் தனக்குத்தானே வஞ்சித்துக் கொள்வதை எப்படி வெளிப்படுத்துகிறதுமாக இருக்கும்!

ஆகையால், இந்த விஷயங்களின் பொருட்டு இளம்வயது கிறிஸ்தவன் (வயதின் அடிப்படையில் மட்டுமல்ல) ஞானமாகிய ஆலோசனையை நன்றாகக் கவனித்து, கர்த்தருடைய வார்த்தையின்படியே தன்னுடைய நடத்தையில் கவனம் செலுத்துவானாக! அவன் உரிமை மற்றும் கடமை பற்றிய எல்லா கேள்விகளுக்கும் பதில் பெற்றுக் கொள்ள அதனிடம் வருவானாக; அத்துடன் தேவனுடைய அன்பின் பிரமாணமாகிய பூரண பிரமாணம் – தன்னுடைய அன்றாட ஜீவியத்தின் எல்லா நிலைமைகள் மற்றும் சூழ்நிலைகளிலும் மற்றவர்களோடுள்ள தொடர்புகளுடனும், கடமைகளுடனும் எவ்வாறு பொருந்துகிறது என்பதைக் கற்றுக் கொள்வானாக. அப்படிச் செய்யும் போது கிருபையில் நிலையான வளர்ச்சியடைவதில் தோல்வியடையவும் முடியாது, ஆவியின் கனிகள் குறைவுபடவும் செய்யாது.

ஆனால் இளமைப்பருவம் மட்டுமே கர்த்தருடைய வார்த்தையின் மூலமாக ஒருவருடைய நடத்தையை வழிநடத்திச் செல்ல அவசியமாயிருக்கும் காலப்பகுதி என்பதல்ல. வாழ்க்கையில் ஒரே சரியான பாதையை தொடங்கி தேவனுடைய வார்த்தையின்படி நம்முடைய வழியை எச்சரிக்கையாக கவனித்துக் கொள்ளும் அதே வேளையில், நம்முடைய நாட்களின் முடிவு வரை அதைக் குறித்து ஜாக்கிரதையாக கவனிப்பதும், அதனை தியானிப்பதும், அதற்கு சமமாக சரியானதும், அவசியமானதுமாகும். இந்த முறையில் செலவழிக்கப்படுகிற ஒரு ஜீவியம் முதிர்வயதில் அழகாக மாறுகிறது. அது முதிர்ச்சியான பிரகாசத்துடன் கூடிய, ஆவியின் எல்லா கனிகளையும் வெளிப்படுத்தி, அதன் செல்வாக்கிற்குள் இருக்கிற எல்லாருக்கும் அன்பான ஆசீர்வாதமாகவும் இருக்கும். உண்மையாகவே சுயவெறுப்பு மற்றும் சுயகட்டுப்பாடு கொண்ட நீண்ட வாழ்க்கை, நம்முடைய விழுந்து போன இயல்பின் கீழ்நோக்கிச் செல்லும் மனப்போக்கை மேற்கொள்வதற்கு தெய்வீக கிருபையின் வல்லமையின் நடைமுறை விளக்கத்தை தரும் போது நரைமுடியுடைய தலையானது பரிசுத்தமெனும் அழகினால் கிரீடம் சூட்டப்படும் போது, ஒவ்வொரு வயது முதிர்ந்த பரிசுத்தவானுக்கும் எப்படிப்பட்ட தேவசாயலான தோற்றத்தைத் தருகிறது! முதிர்வயதுள்ள கிறிஸ்தவர் பொறுமையோடு கூடிய சகிப்புத்தன்மையும், அன்பான அன்பிரக்கமும், கனிவான பொறுமையும் உள்ளவராக, இப்போதும் கூட நாளின் பாரத்தையும், வெப்பத்தையும் தாங்கிக் கொண்டிருப்பவர்களிடம், பல்வேறு வழிகளிலும் அன்பான ஆலோசனையையும், நேரத்துக்கு ஏற்ற உதவியையும் கொடுக்கக் கூடியவராகவும், அவர்களைத் தொடர்ந்து உற்சாகமூட்டி உத்தமமான செயல்களுக்கும், உறுதியான மனவலிமைக்குமாக அவர்களைத் தூண்டுதல் அடையச் செய்து, அவர்களுடைய அன்பின் பிரயாசங்களையெல்லாம் முழுமையாக பாராட்டுகிறவராயிருப்பது எப்பேற்பட்டதோர் சிறந்த மாதிரியாக இருக்கும்!

ஆவிக்குரிய ஜீவியமானது, சரீரப் பிரகாரமான ஜீவியத்தைப் போலவே நிலையான பிரமாணங்களின்படி

தான் வளர்சியடைகிறது - இயல்பான ஜீவன் இயற்கை விதிகளின்படி, அதனைத் தாங்கி ஆதரித்து, வளர்க்கவும், ஆரோக்கியமாக அதனை வைத்துக் கொள்ளவும், ஊட்டமளித்து போஷிக்கப்படுவது போல, ஆவிக்குரிய ஜிவியமும் பல்வேறு வகையிலான கிருபைகளால் ஊட்டமளிக்கப்பட்டு, கர்த்தருடைய வார்த்தையால் தொடர்ந்தேர்ச்சியாக போஷிக்கப்பட வேண்டும்: உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்.

தேவனுடைய சத்திய வார்த்தையாகிய வேதாகமம் தோட்டக்காரனுக்கு விதையை பற்றியதோர் அட்டவணையைப் போல இருக்கிறது, அது குணாம்சத்தை வளர்க்கும் பண்புகள் (விதைகள்) நிறைந்ததாக இருக்கின்றது; அவைகள் சரியான தகுந்த சூழ்நிலைகளின் கீழ் அல்லாமல் முதிர்வடையச் செய்ய முடியாது. குண இலட்சணம் குறைவுபடுகிற இடத்தில், ஊழியங்கள் பெருகுமானால், அல்லது அதற்கேற்ப குணலட்சணங்கள் வளர்ச்சியடையவில்லை என்றால் அந்த அவலநிலை எவ்வளவு வருத்தமாக இருக்கிறது. மேலும் அது ஒவ்வொரு பகுத்தறியும் பரிசுத்தவானுக்கும் தன்னைத்தானே வஞ்சித்துக் கொள்ளுதலை, எப்படி வெளிப்படுத்துகிறதாக இருக்கும்.

ஒவ்வொரு விதையின் விலையையும் கருத்தில் கொள்ளும் போது வாலிப கிறிஸ்தவன் ஞானமான ஆலோசனையை நன்கு அறிந்து, கர்த்தருடைய வசனத்துக்கு ஏற்றபடி தன்னுடைய நடத்தையைப் பற்றி எச்சரிக்கையாயிருப்பானாக. உரிமை மற்றும் கடமை பற்றிய எல்லா கேள்விகளுக்கான விடைகளுக்காக அவன் அதனிடம் வருவானாக; அத்துடன் தேவனுடைய பூரண பிரமாணமாகிய அன்பின் பிரமாணம் எப்படி அவனது அனுதின ஜீவியத்தின் எல்லா நிலைமைகள் மற்றும் சூழ்நிலைகளுக்கும் பொருந்துகிறதாயிருக்கிறது என்று கற்றுக் கொள்ளட்டும். அப்படிச் செய்கையில், அங்கே கிருபையில் நிலையான வளர்ச்சியும், ஆவியின் கனிகள் குறைவுபடாமலும் இருக்கும்.

பிரதிஷ்டை செய்த பிள்ளைகள் பரலோகத்திலிருக்கிற பிதாவானவரைப் பெற்றிருக்கும் சிலாக்கியத்தை பெற்றிருப்பதுடன், மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும், கற்பலகைகளிலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது என்று அறிவிக்கப்பட்டபடி, இவ்வாறாக நிருபமுமாக இருக்கிறார்கள். (2 கொரி. 3:3). ஆகையால், நாம் இந்த உலகத்திற்குள்ளாக செல்லுகிறவர்களாயிருக்கிறபடியால், நம்முடைய வார்த்தைகளினாலும், நம்முடைய ஜீவியத்தினாலும், சத்தியத்துக்கு சாட்சியுள்ளவர்களாகவும் நம்முடைய பரமபிதாவின் நாமத்தின் மீதோ அல்லது நம்முடைய அன்பான கர்த்தரும் இரட்சகருமானவருடைய நாமத்தின் மீதோ எந்த நிந்தையையும் கொண்டுவராதபடிக்கு எவ்வளவு ஜாக்கிரதையுள்ளவர்களாக நடந்து கொள்ள வேண்டும்! தேவனுடைய கிருபையால் நாம் இயேசுவின் சாயலைப் பிரதிபலிக்க வேண்டும், நம்முடைய வசனத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கிறவர்கள் நம்முடைய கிறிஸ்தவ நடக்கையை பார்ப்பதன் மூலம், பரலோகத்திலிருக்கிற நம்முடைய பிதாவை மகிமைப்படுத்தும்படியாக வழிநடத்தப்படலாம். நம்முடைய கர்த்தரும், எஜமானருமானவர் தம்முடைய சபையிடம், நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் என்கிறார். அவர், "**இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது**" என்று புத்திமதி கூறுகிறார். (மத். 5:14,16).

பிரதிஷ்டை செய்த கிறிஸ்தவன் மிகவும் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும். (மிக கவனமாக உங்கள் அடிகளைத் தெரிந்தெடுத்தல்) ஓ, தேவனைப் பிரியப்படுத்த நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக நடக்க வேண்டும்! (BS 1969, பக்கம் 2-ஐ பார்க்கவும்) நாம் அறியாமையுள்ளவர்களைப் போலல்லாமல், ஞானமுள்ளவர்களைப் போல நடந்து, காலத்தை மீட்டெடுக்க வேண்டும் (நம்முடைய வாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்), ஏனெனில் நாட்கள் பொல்லாதவைகளாயிருக்கின்றன. காலங்கள் கொடியவைகளாயிருக்கின்றன. (2 தீமோ. 3:1-8), அதனால் தெளிந்த புத்தியினாலும், சாந்தமுள்ள ஞானத்தாலும் மட்டுமே, நம்முடைய தலைவராகிய கிறிஸ்துவை நோக்கிப் பார்த்து, நாம் நமக்குரிய கஷ்டமான வழியில் நடந்து அதன் மகிமையான முடிவிற்கு போக முடியும்.

## கிறிஸ்தவ தியானத்தின் அம்சங்கள்

பிரதிஷ்டை செய்துள்ள தேவனுடைய பிள்ளையானவன், தியானம் செய்கிற ஒவ்வொரு சமயத்திலும் தேவனிடமாக தன்னுடைய எண்ணங்களை திருப்புகிறான் அல்லது அவருடைய குணாதிசயத்தைப் பற்றியும், திட்டம் மற்றும் கொள்கைகளைப் பற்றியும் முக்கியமாக, அவருடைய சத்திய வசனத்தில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறபடியே சிந்திக்கிறான். தியானம் செய்தவற்கான சில காலகட்டங்கள், மற்ற நேரங்களைக் காட்டிலும் அதிக தீவிரமாயிருக்கும்; அதற்கு உதாரணம், ஜெபம் செய்கிற நேரமாகும், லூத்தர் வெஸ்லி மற்றும் கிறிஸ்தவர்கள் மத்தியில் பிரதானமான மற்றவர்களும் அடிக்கடி, ஒரே சமயத்தில் அநேக மணி நேரங்களை வாஞ்சையான ஜெபத்தில் செலவழித்திருக்கின்றனர். நம்முடைய கர்த்தராகிய இயேசுவும் அடிக்கடி பிதாவுடன் ஜெபத்தில் ஐக்கியமாயிருந்தார், இரவு முழுவதும் கூட ஜெபத்தில் தரித்திருந்தார். (மத். 14:23; லூக். 6:12; 11:1).

நமது இருதயப்பூர்வமாக உணர்ந்து ஜெபத்தில் பாவஅறிக்கை செய்தல், நன்றி செலுத்துதல், துதித்தல் மற்றும் ஐக்கியம் கொள்ளுதல் ஆகியவையே பொதுவாக தியானமாக இருக்கின்றன; அதற்கு, சுயநலம் மற்றும்

உலகப்பிரகாரமான காரியங்களிலிருந்து மனதைப் பிரித்துக் கொள்ளுதல் அவசியப்படுவதாக இருக்கிறது. அதைப் போலவே நாம் பிரதிபலிக்கும் காலப்பருவங்களில், தேவனுடைய குணப்பண்புகளையும், நம்முடைய தனிப்பட்ட ஜீவியங்களில் அவர் நமக்கு செய்திருக்கிறவற்றையும் நாம் கருத்தில் கொள்ளும்போது, நாம் நம்முடைய எண்ணங்–களை மேம்படப் பண்ணி அதாவது நமது சிந்தனைகளை, அதிக குறிப்பாக, தற்காலிகமான காரியங்களிலிருந்து விலக்கி, நித்தியமான காரியங்களில் வாசஞ்செய்கிறோம். (2 கொரி. 4:16-18). இந்த தியானம் எந்த அளவுக்கு அதிகமாக அடிக்கடியும், நீடித்ததாகவும் இருக்கிறதோ, அந்த அளவுக்கு அதிகமாக இது ஒரு பழக்கமாக மாறுவதுடன், நமது குணாதிசயங்கள் தேவ சாயல் மற்றும் கிறிஸ்துவின் சாயலின் வரிசையில் வார்ப்பிக்கப்படுகின்றன. (இது சம்பந்தமான கருத்துக்களை மேலும் அறிய BS 1977 பக்கம் 27 பார்க்கவும்).

சங். 116:7-ம் வசனத்தைப் பற்றி அனுதின பரலோக மன்னா விளக்கமானது இவ்வாறாகக் குறிப்பிடுகிறது: கிறிஸ்தவனுடைய நினைவின் வழக்கமானது அவனுடைய ஆவிக்குரிய நிலைமையைக் காட்டுகிற அளவுகாட்டியாக இருப்பதால் அது அவனுடைய ஆவிக்குரிய வளர்ச்சி அல்லது வீழ்ச்சியுடன் அதிக சம்பந்தமுள்ளதாயிருக்கிறது. நல்ல நினைவுகளின் வழக்கம் கவனத்துடன் விருத்தி செய்யப்பட வேண்டும். "நினைவின் வழக்கம்" என்பது, மனமானது செய்திருக்கும் வேலைகளில் வழக்கத்தின்படி திரும்ப வந்து சேருகின்ற இயல்பான மனநிலை என்று பொருள்படும். ஜீவியத்தின் கடமைகளில் நாம் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருக்கும் பொழுது, நமது மனதின் ஆற்றல்களை நாம் செய்யும் வேலைக்கு ஈடுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஏனெனில் நாம் சிந்தனையில் கவனம் செலுத்தாமல் எந்திரத்தைப் போல ஒரு காரியத்தைச் செய்தால் நாம் அதை நன்றாகச் செய்ய முடியாது. இருப்பினும் இங்கேயும் குணத்தில் உறுதிப்படுத்தப்–பட்டிருக்கிற கிறிஸ்தவ கோட்பாடு நாம் அறியாமலே வழிநடத்தும். ஆனால் வேலையினாலும் அதன் கவனத்தினாலும் உண்டான கஷ்டம் சிறிது நேரம் நீங்கும் போது காந்தமுள் துருவத்தை நோக்கி வருவது போல், உறுதிப்படுத்தப்பட்ட நினைவின் பழக்கம் உடனே தேவனண்டையில் இளைப்பாற திரும்ப வேண்டும் என்று தெரிவிக்கிறது.

தேவனுடைய மற்றும் இயேசுவின் குணாதிசயத்தைப் பற்றி பயபக்தியுடன் ஆழ்ந்து சிந்திப்பது, அவர்களைப் போன்ற குணாதிசயம் உள்ளவர்களாக கிறிஸ்தவர்கள் மாறுவதற்கு மிகவும் சிறந்த வழிகளில் ஒன்றாக இருக்கிறது. (2 கொரி. 3:18). இந்த காரணத்துக்காகவே, அப்போஸ்–தலனாகிய பவுல் இயேசுவைப் பின்பற்றுபவர்கள் அவரையே நினைத்துக் கொள்ளும்படி (எபி. 12:3), அதாவது அவருடைய விசுவாச உண்மைத்துவத்தின் மாதிரியிலிருந்து, பலத்தைப் பெற்று அவருக்கு பின் தங்களை மாதிரியாக்கிக் கொள்ள




வேண்டும் என்று வலியுறுத்துகிறார். கிறிஸ்துவின் சாயலில் நாம் முன்னேறிச் செல்ல வேண்டுமானால் தீமோத்தேயு–வுக்கு பவுல் கொடுத்த ஆலோசனையை நாம் பின்பற்ற வேண்டும்: நீ தேறுகிறது (முன்னேற்றம்) யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக் கொண்டு இவைகளிலே நிலைத்திரு (நாம் தொடர்ந்தேர்ச்சியாக நன்மையும், பயனுமுள்ள எண்ணங்களால் நிறைந்திருக்க வேண்டும்). (1 தீமோ. 4:15; பிலி. 4:8-ஐயும் கூட பார்க்கவும்). ஒரு மனுஷன் வழக்கமாக எதை சிந்திக்கவும், உணரவும் செய்கிறானோ, அதுவே அவனை நன்மை அல்லது தீமை செய்கிற ஒருவனாக உருவாக்குகிறது. (லூக். 6:43-45).

## தியானத்தைப் பற்றிய வேத வாக்கியங்கள்

சங். 119:97: "**உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுவதும் அது என் தியானம்.**" தியானம் - தேவன் மீதும், அவருடைய சித்தத்தின் மீதும் உள்ள அன்பால் தூண்டப்படுகிறது.

சங். 119:15: "**உமது கட்டளைகளைத் தியானித்து உமது வழிகளைக் கண்ணோக்குகிறேன்.**" அவருடைய கட்டளைகள் மற்றும் பிரமாணங்களில் தியானமானது களிகூருகிறது.

பிலி. 4:8: "**கடைசியாக சகோதரரே, உண்மையுள்ள–வைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ, அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்**" தியானத்தில் பொதுவாக தேவனுடைய வார்த்தைகளே இடம் பெறுகின்றன.

யோசு. 1:8: "**இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயை விட்டுப் பிரியாதிருப்பதாக: இதில் எழுதியிருக்கிறவை–களின்படியெல்லாம் நீ செய்ய கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதை தியானித்துக் கொண்டிருப்பாயாக அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துக் கொள்ளுவாய்.**" தியானம் செய்வது எந்த காலகட்டத்திலும் ஏற்றதாகவும்,தொடர்ந்தேர்ச்சியாக செய்ய வேண்டியதாகவும் இருக்கிறது.

சங். 77:6: "**இராக்காலத்தில் என் சங்கீதத்தை நான் நினைத்து, என் இருதயத்தோடே சம்பாஷித்துக் கொள்ளுகிறேன், என் ஆவி ஆராய்ச்சி செய்தது.**" தியானம் செய்தல் ஆத்துமாவை மனத்தாழ்மையுள்ளதாக்குகிறது.

சங். 104:34: "**நான் அவரைத் தியானிக்கும் தியானம் இனிதாயிருக்கும்: நான் கர்த்தருக்குள் மகிழுவேன்**" தியானம் ஆனந்தத்தைத் தருகிறது.

சங். 49:3 "**என் வாய் ஞானத்தைப் பேசும் என் இருதயம் உணர்வைத் தியானிக்கும்.**" தியானம் செய்தல் தேவனுடைய சத்தியத்தை மனதிலும் இருதயத்திலும் உறுதிப்படுத்துகிறது.

தியானம் செய்தல் பகலிலோ அல்லத இரவிலோ எந்த நேரத்திலும் செய்யப்படலாம். தேவனுடைய சாயல் மற்றும் கிறிஸ்துவின் சாயலான குண இயல்புகளைப் பற்றி தியானிப்பது, அதைப் போன்ற குண இயல்புகளை நம்மில் உருவாக்குகிறது. நாம் காலை, மதியம், மற்றும் இரவில் யேகோவா தேவனைப் பற்றியும், அவரது திட்டம் மற்றும் கிரியைகள் பற்றியும் நம்முடைய வேலையின் தகுதியான தேவைகளுக்குத் தக்க அளவிலும், மற்றவர்கள் மீது நம்முடைய தகுந்த பொறுப்புகள் அனுமதிக்கிற அளவிலும், நம்முடைய மனங்களில் ஆவியினால் எப்போதும் அவருடன் ஐக்கியங் கொண்டு, அவர் எப்போதும் நம்முடன் பிரசன்னமாகி இருக்கிறார், நாம் தூங்கும் போது கூட, அவர் நம்மை கவனிக்கிறார். நம்மை பாதுகாக்கிறார் (சங். 4:8; 139:17,18) என்பதை அறிந்தவர்களாக நாம் தியானிக்க வேண்டும். நாம் விழித்துக் கொள்ளும் மணி நேரத்தி-லிருந்தே நம்முடைய மனங்களில் அவருடனே ஐக்கிய-மாயிருப்பது எவ்வளவு ஏற்றதாயிருக்கிறது! ஓ, தேவனுடைய வார்த்தை மூலமாக மட்டுமே பெறப்பட்டு, மனதிலும், இருதயத்திலும் சார்ந்திருக்கும் சமாதானமே எல்லா சூழ்நிலைகளிலும் மனஅமைதியைத் தரும்.

தேவனுடைய நான்கு குணப்பண்புகளில் ஒன்று ஞானம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். தேவனுடைய தெரிந்தெடுக்கப்பட்ட பாத்திரங்களில் ஒருவ-ரான சாலமோன் ராஜா, அக்காலத்தில் வாழ்ந்தவர்களில் மிகச் சிறந்த ஞானமுள்ள மனிதனாக அவருடைய ஞானத்திற்காகவே அறியப்பட்டவராக இருந்தார். ஆயினும் அவர் கூறின அவருடைய சொந்த உபதேசங்களை நன்றாகவோ அல்லது குறைவாகவோ பின்பற்றியிருந்தார். அவையாவும் சிறந்த ஞானமாக - அவை சொல்லப்பட்ட போது இருந்தபடியே இந்நாளிலும் மெய்யானதாக, பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகிறது. ஞானத்திற்காக சாலமோன் ஜெபித்ததை தேவன் கேட்டு, அவன் வேண்டிக் கொண்டதை அருளினார் என்ற உண்மையும், அதோடு சேர்த்து - அவருடைய எழுத்துக்கள் நம்முடைய கர்த்தருடைய நாளில் பரிசுத்த கட்டளையின் ஒரு பகுதியாக ஒப்புக் கொள்ளப்பட்டுடன், புதிய எற்பாட்டு எழுத்தாளர்-களால் புறக்கணிக்கப்படாமல், ஆனால் அதற்கு மாறாக அவற்றிலிருந்த மேற்கோள் காட்டப்பட்டன என்பதே, இப்படிப்பட்ட நீதிமொழிகளின் ஞானம் பரத்திலிருந்து வருகிறதான ஒரு வகையாயிருப்பதற்கு நமக்கு போதுமான உத்தரவாதம் என்ற உண்மையும் நமக்கு சொல்லப்படுகிறது.

ஒரு ஞானமுள்ள தகப்பனின் கீழ்ப்படிதலுள்ள மகன், நல்ல ஆலோசனைக்கு செவி கொடுப்பதன் மூலமாக தன்னுடைய நாட்களை நீட்டிக்கச் செய்வான் என்று தகப்பனாகிய சாலமோன் அறிவிக்கிறார்: **பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து அவன் முதிர்வயதிலும் அதைவிடாதிருப்பான்.** (நீதி. 22:6). சாலமோனின் தகப்பன் இந்த வார்த்தைகளைக் கூறினார். **என் வாய் ஞானத்தைப் பேசும், என் இருதயம் உணர்வைத் தியானிக்கும்.** (சங். 49:3). பெற்றோரின் முழு ஜீவிய ஓட்டமும், அவர்களுடைய பிள்ளைகளிடமாக அவர்கள் மீதான தங்களுடைய அன்பையும், அவர்களுடைய நலனில் தங்களுக்கு இருக்கும் ஆழ்ந்த அக்கறையையும் வெளிப்- படுத்த வேண்டும். சிறுபிள்ளை இயல்பாகவே தங்களுடைய பெற்றோரைக் குறித்து மிக உயர்வாக எண்ணுவதுடன், இந்த சிறுபிள்ளைக்குரிய நம்பிக்கையானது. அன்பற்ற நடத்துதல், பயமுறுத்தல் மற்றும் பெற்றோர் புறக்கணிப்பு மூலமாக நொறுங்கிப் போனாலொழிய, அவர்களுடைய அறிவு-ரையைப் பாராட்டி ஏற்றுக் கொள்வார்கள். ஒரு ஞானமுள்ள தகப்பனுடைய கீழ்ப்படிதலுள்ள மகன் நன்மையான ஆலோசனைக்கு கவனமாக செவிகொடுப்பதன் மூலமாக தன்னுடைய நாட்களை நீடிக்கச் செய்கிறான் என்று தகப்பனாகிய சாலமோன் ஆலோசனை சொல்கிறார். நம்முடைய பரமபிதாவானவர் தம்முடைய குமாரனைப் பற்றி: "**அவர் குமாரனாயிருந்தும், பட்டப்பாடுகளினாலே கீழ்ப்-படிதலைக் கற்றுக் கொண்டார்**" என்று சொல்லியிருக்கிறார். (எபி. 5:8).

நாம் சத்தியத்தின் மூலமாக அதிகமாக பிரகாசிப்-பிக்கப்பட வேண்டியவர்களாகவும், அதன் ஆவியால், அவ்வாறு அதிகமாக நிரப்பப்பட்டவர்கள் ஆகி, தொடர்ந்-தேர்ச்சியாக அதன் ஜீவனுள்ள பிரதிநிதிகளாக மாம்சத்திற்-கென்று விதைக்காமல் எப்போதுமே ஆவிக்கென்று விதைக்கிறவர்களாக இருக்க வேண்டும். "**இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன் (சத்திய ஆவியாகிய அவரது ஆவியினால்) இயேசுகிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப் பண்ணும் பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்.**" (2 கொரி. 4:6; யோவா. 1:9).

மெய்யாகவே தகப்பனாகிய சாலமோனின் இந்த பாடத்தை நாம் பயனளிக்கும் விதமாக தேவனுடைய புத்திரர்களுக்கு பொருந்தச் செய்யலாம், இதில் தேவனையே பேசுகிறவராக கருத வேண்டும். ஏனெனில் பரிசுத்தமான காரியங்களில் நாம் பரமபிதாவை அப்படியே நகலெடுக்-கிறோம். நாம் இன்னும் பாவிகளாக இருக்கும் போதே - அவர் நம்மை மீட்டுக் கொண்டு மீட்பராகிய கிறிஸ்துவிடமாக இதுவரையில் இழுத்துக் கொள்ளப்பட்ட எல்லாரையும், அவருடைய அன்பாலும் நீதியாலும் அவர் இழுத்திருக்கிறார். பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காகவும், கிறிஸ்துவின் இரத்தத்தின் மேல் உள்ள விசுவாசத்தின் மூலமாக நீதிமான்களாக்கப்படுவதற்காக கிறிஸ்துவிடம் வரும் போது,

நாம் இவ்வாறாக பிதாவிடம் வந்திருக்கிறோம். அப்போது தான் பரமபிதா நம்மை நோக்கி அவருடைய வார்த்தையின் மூலமாக, “**என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா.**” (நீதி. 23:26). உன்னுடைய பற்றுகளை, உன்னுடைய அன்பை, உன்னுடைய சித்தத்தை தா என்று கூறுகிறார். தங்கள் சித்தங்களை, தங்கள் அன்பை தங்கள் பற்றுகளை தேவனுக்கு கொடுத்தவர்கள், தங்களுடைய எல்லாவற்றையும் கொடுத்துவிட்டார்கள்; எப்படியெனில் நம்முடைய சித்தங்களும், பற்றுகளுமே நன்மைக்கென்றோ அல்லது தீமைக்கென்றோ நம்மை கட்டுப்படுத்துகின்றன.

நாம் தேவனுடைய அழைப்பை ஏற்றுக் கொண்ட போது (ரோம. 12:1) நம்முடைய இருதயங்களை, அதாவது நம்முடைய எல்லாவற்றையும், ஓர் ஜீவ பலியாக, அவருடையதாயிருக்கும்படியாகவும், அவருடைய நல்ல விருப்பத்தைச் செய்யவும் ஒப்புக் கொடுத்து நாம் அவரை முதலாவது நேசித்ததினால் அல்ல, ஆனால் அவர் நம்மை முதலில் நேசித்து, தம்முடைய குமாரனை நம்முடைய பாவங்களுக்கான கிருபாதார பலியாக (திருப்தி செய்ய) ஆவதற்கு அவரைக் கொடுத்தார் (1 யோவா. 4:10). எனவே, இப்போது பிதாவினுடையவர்களாக ஏற்றக் கொள்ளப்பட்டு, அவருடைய குடும்பத்திற்குள் சேர்க்கப்பட்டவர்களாயிருக்க, புத்திர சுவிகார ஆவியைப் பெற்றுக் கொள்வதன் மூலம், குமாரர்களைப் போன்ற நம்மிடம் அவர், சாலமோனின் மொழிநடையில், தம்முடைய வார்த்தையை எச்சரிக்கையுடன் கேட்கும்படியாக பேசுகிறார்; அவர் அப்படி செய்வதன் மூலமாக, நம்முடைய ஜீவிய காலம் அநேகமாயிருக்கும், மிகவும் அநேகமாக, நித்தியமாக இருக்கும் என்று அவர் நம்மிடம் வாக்களிக்கிறார்.

## தேவனே நம் போதகர்

தேவனால் போதிக்கப்பட்டு வருகிற எல்லாரும் நீதி. 4:11-ன் பொருத்தமான சாட்சியை தங்களுக்கும், தேவனுடைய புத்திரர்களாகிய யாவருக்கும் தாங்கியிருக்க முடியும்: “**ஞானமார்க்கத்தை நான் உனக்கு போதித்தேன். செவ்வையான பாதைகளிலே உன்னை நடத்தினேன்.**” மிக அதிகமாக சிறந்ததும் விலையேறப் பெற்றதுமான வேதவாக்கியத்தின் வாக்குத்தத்தங்களைச் சார்ந்திருக்கிற அப்படிப்பட்ட எல்லாரும், தேவனுடைய குமாரர்களாகவும், அவருடைய அன்பில் நிலைத்திருப்பவர்களும், தெய்வீக பாதுகாப்பு மற்றும் அறிவுறுத்தலின் கீழ் இவ்வாறாக தங்களை வைத்துக் கொள்ளுகிறவர்கள் எல்லார் மீதுமான தெய்வீக பராமரிப்பைக் குறித்த ஒரு தீர்க்கதரிசனமாக வசனம் 12-ஐ நம்பிக்கையோடு நோக்கி பார்த்திருப்பர்கள். நீ அவைகளில் நடக்கும் போது உன் நடைகளுக்கு இடுக்கண் உண்டாவதில்லை: நீ அவைகளில் ஓடினாலும் இடறமாட்டாய் (ரோதர்காம்) அவர்களுடைய ஆவிக்குரிய பாதையில் அவர்களுடைய நடைகள் கர்த்தரால் வழிநடத்தப்படும், தேவனுடைய பரிபாலனம் அவர்களுக்கு வழிகாட்டுகிற அந்த பாதையில் அவர்கள் பின்பற்றிச் செல்லும் வரை அவர்கள் இடறப்போவதில்லை என்பதாக உறுதியளிக்கப் படுகிறார்கள்; ஆம், தேவனிடத்தில் எல்லாவற்றுக்கும் மேலாக முதன்மையாக அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும். (ரோம. 8:28).




வயது முதிர்ந்த மற்றும் அதிக அனுபவம் வாய்ந்த குமாரன் - பரலோக பிதாவின் ஆவிக்குரிய குமாரனாகவோ அல்லது பூமிக்குரிய தகப்பனின் மாம்ச பிரகாரமான குமாரனாகவோ இருக்கலாம், அந்த குமாரன் அந்த சாட்சியை (வசனம் 13) அதிகமாக உணர்ந்து பாராட்ட வேண்டும். “**புத்திமதியை உறுதியாய் பற்றிக் கொள், அதை விட்டு விடாதே, அதை காத்துக் கொள், அதுவே உனக்கு ஜீவன்**” எபி. 2:1-ல் கொடுக்கப்பட்டுள்ள ஞானமுள்ள வார்த்தைகளை. ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டும்: ஆகையால் நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய் கவனிக்க வேண்டும். நாம் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்பது மட்டும் போதாது, அதை நன்மையும், உண்மையுமான இருதயங்களுக்குள்ளாக ஏற்றுக் கொள்ளுவதும் கூட போதாது என்பது நன்கு தெளிவாகிறது. நாம் அதனை பாதுகாப்பாக பற்றிக் கொள்ள வேண்டியதும் கூட அவசியமாய் இருக்கிறது; நாம் அதை செயல்படுத்த வேண்டும். நாம் நம்முடைய ஜீவித்திருத்தலின் அத்தியாவசியமான ஒரு பாகமாக அதனை ஒன்றிணைக்கிறோம். இதைச் செய்வதன் மூலம் சத்திய ஆவி தேவனுடைய பிள்ளைகள் எல்லாருடைய ஆவியுமாகிறது - அவர்களிலுள்ள பரிசுத்தாவி பரலோக பிதாவின் மனம், குணாதிசயம் மற்றும் சித்தத்துடன் இசைவாகவும், முழுமையான ஒத்துணர்விலும் இருக்கிறது.

அன்பும், இரக்கமும் உள்ள நம் பிதாவானவர் நல்லோர் மேலும், தீயோர் மேலும் மெய்யான மகிமையான, பொதுவான பூமிக்குரிய ஆசீர்வாதங்களைப் பொழிவதற்காக உலகத்தார் அதனை மதித்தறிந்து களிகூருகையில். சில விஷயங்களில் அதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரங்களைத் திரும்ப செலுத்துகையில், நம்முடைய இருதயங்கள் இந்த விஷயங்களில் களிகூருவது மட்டுமல்லாமல், அதோடு கூட தேவனுடைய குமாரர்கள் மீது மட்டும் பொழிந்தருளப் படுகிற மேலான ஆவிக்குரிய அனுகூலங்களிலும் களிகூர்ந்து எப்போதும் எல்லாவற்றுக்காகவும் பிதாவாகிய தேவனுக்கு நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நன்றிகளை செலுத்தவும் வேண்டும்.

மெய்யாகவே, இது உள்ளுக்குள் பெற்றிருக்க வேண்டிய மகிழ்ச்சியான ஒரு மனதின் கட்டமைப்பாகும். இதனை எல்லா சமயங்களிலும், எல்லா சூழ்நிலைகளின் கீழும் காத்துக் கொள்ளக் கூடியவர்கள் கிறிஸ்தவ குணாதிசயம் மற்றும் அனுபவத்தையும் போற்றத்தக்க




வகையில் அடைந்துள்ளனர். நம் அனைவருக்கும் சோதனைகளும், வேதனைகளும் உண்டு. முடிவை நாம் நம் கவனத்தில் நிச்சயமாகக் கொள்ள வேண்டும். நாம் மேகங்களுக்கு மேலாக தேவனுடைய அன்பாகிய சூரிய வெளிச்சத்தில் வாழ்வோமாக; தெய்வீக பரிபாலனத்தினால் வடிவமைக்கப்பட்டுள்ள மகிமையான முடிவை அடைந்து கொள்வோம் என்ற நம்பிக்கையில் பொறுமையோடும், நன்றியறிதலோடும் கூட நம்முடைய வேதனை நிறைந்த பரீட்சைகளுக்கும் கடும் சோதனைகளுக்கும் நம்மை சமர்ப்பிப்போமாக. (ரோம. 5:3-5).

நம்மைப் பற்றிய தேவனுடைய சித்தத்துக்கு தெளிந்த விழிப்புணர்வையும் நெருக்கமான கவனத்தையும் செலுத்த வேண்டிய அவசர தேவையை கருத்தில் கொண்டு உலகத்தின் ஆவியினால் எந்த அளவிலாவது வெறியூட்டப்பட்டு, உணர்வு மழுங்கி போனவர்களாய் இருக்கிற எல்லாரையும் அப்போஸ்தலன் அழைத்து, தூங்குகிற நீ விழித்து மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னை பிரகாசிப்பிப்பார் (எபே. 5:14) என்று சொல்கிறார். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், உலகத்தின் ஆவியை விட்டொழித்துவிட்டு, தேவனுடைய ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பதன் முக்கியத்துவத்திற்கு விழித்துக் கொண்டவர்களாக அதன் ஆசீர்வாதமான உற்சாகமூட்டுதலும், ஜீவனைத்தருகிற செல்வாக்குகளுடன் நிச்சயமாக பின்தொடர்ந்து வரும் சத்திய வெளிச்சத்திற்காக அவரை நோக்கிப் பார்ப்போமாக.

“**நீங்கள்.... கவனமாய் நடந்து கொள்ளப் பார்த்து** (ஜாக்கிரதையாக உங்கள் நடைகளைத் தெரிந்தெடுத்து) **கொள்ளுங்கள்.**” வசனம் 15. ஓ, தேவனைப் பிரியப்படுத்த நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும்! நாம் அறியாமையுள்ள மனிதர்களைப் போல நடந்து கொள்ளாமல், ஆனால் ஞானமுள்ளவர்களைப் போல நடந்து, காலத்தை மீட்டுக் கொண்டவர்களாய் (நம்முடைய வாய்ப்புகளை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு) நடந்து கொள்ள வேண்டும். ஏனெனில் நாட்கள் பொல்லாதவைகளாய் இருக்கின்றன. காலங்கள் கொடிதாய் இருக்கின்றன. (1 தீமோ. 3:2-8). விழிப்புடனிருத்தல் மற்றும் சாந்த குணத்தின் ஞானம் ஆகியவற்றாலும் நம்முடைய தலைவராகிய கிறிஸ்துவை நோக்கிப் பார்ப்பதாலும், நம்முடைய கடினமான பாதையில் அதன் மகிமையான முடிவு வரைக்கும் நாம் நடந்து செல்ல முடியும்.

பிரதிஷ்டை செய்திருக்கிற தேவனுடைய பிள்ளைகள் என்ற வகையில் நாம் காலத்தை மீட்டுக் கொண்டு ஞானமாய் நடந்து கொள்வதன் மூலம் “**நாம் எச்சரிக்கையாய் இருக்க**” முடியும். 1 தீமோ. 3:5-ல் “**தேவனுடைய வீடு**” என்று குறிப்பிடப்பட்டுள்ள விஷயம் ஒரே மெய்யான சபையின் - எக்லீஸியாவின் ஒரு பகுதியாகும். அது கிறிஸ்தவர்கள் சந்திக்கிற கோபுரத்துடனோ அல்லது கோபுரம் இல்லாமலோ கட்டப்பட்ட ஒரு கட்டிடம் அல்ல; ஆனால் அது எக்லீஸியா என்கிற மெய்யான சபையாய் இருக்கிறது. கிரேக்க வார்த்தையான எக்லீஸியா என்பதற்கு “அழைக்கப்பட்டவர்கள்” என்று அர்த்தம். குறுகிய கருத்தில் கிறிஸ்துவின் தலைமை மற்றும் சபையின் சரீரத்துவம் ஆகியவற்றின் அடையாளங்கள் பிரதானமாக அடங்கியிருக்கின்றன. தேவனுடைய தற்காலத்திலுள்ள பிரதிஷ்டை செய்த ஜனங்களடங்கிய எல்லா எக்லீஸியாக்களிலும், இதே கோட்பாடு பொருந்துகிறது, ஏனெனில் அவர்கள் எல்லாரும் விரிவான கருத்தில் எக்லீஸியாவாகிய (அழைக்கப்பட்டவர்கள்) சபையின் அனைத்து பாகங்களாய் இருக்கின்றனர். சிறுமந்தையைவிட மற்றவர்களும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவுடன் திருமண பந்தத்தில் இருப்பதாக சித்தரிக்கப்படுவதை நாம் மறந்து விடக் கூடாது. போவாசுடன் ரூத் தன்னுடைய திருமண பந்தத்தில் நம்முடைய கர்த்தராகிய இயேசுவுடன் அடையாளமான திருமண பந்தத்தில் இருக்கிற ஆரம்ப நிலை வாலிபரான பாத்திரவான்களை அடையாளப் படுத்துகிறாள். (ரூத். 4:10-13; E.Vol. 4, பக்கம் 394,395).

நம்முடைய எஜமானர் தம்முடைய ஒரே மெய்யான சபையிடம், “**நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்**” என்று கூறுகிறார். அவர், “**இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு உங்கள் பிதாவை மகிமைப் படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக் கடவது என்று புத்திமதி கூறுகிறார்.**” (மத். 5:14,16). நாம் பாவம், சுயநலம்,தப்பறை, உலகத்தனம்,சபைப்பிரிவினைவாதம் அல்லது மாம்ச இச்சைகள் ஆகியவை நம்மை செயல்படும்படியாக தூண்டும்படி அனுமதிக்கவும் அவ்வாறாக அது தடங்கலாகவும், நம்முடைய திறமையை மனுஷர் முன்பாக நம்முடைய வெளிச்சம் பிரகாசமாயிராதபடி ஓரளவு மறைக்கவும் செய்ய அனுமதிப்போமானால், அவர்கள் அதனை சீக்கிரமே கவனித்து விடுவார்கள். நாம் சத்தியத்தினால் மிகவும் ஒளியூட்டப்பட்டவர்களாகவும், அதன் ஆவியினால் முழுவதும் நிறைந்தவர்களாகவும் தொடர்ந்தேர்ச்சியாய் அதன் ஜீவனுள்ள பிரதிநிதிகளாக இருக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன் (சத்திய ஆவியாகிய அவருடைய ஆவியினால்) இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தம்முடைய மகிமையின் அறிவாகிய ஒளியை தோன்றப் பண்ணும்பொருட்டாக அவர்கள் இருதயங்களிலே பிரகாசித்தார் (2 கொரி. 4:6; யோவா. 1:9). முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாய் இருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள், வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துக் கொள்ளுங்கள் (எபே. 5:8; 1 தெச. 5:5). இவ்வாறாக, நம்முடைய இருதயங்களில்

பிரகாசித்து கொண்டிருக்கும், தேவனுடைய சத்தியமாகிய வெளிச்சமானது பரிசுத்தாவி மனம், அல்லது மனநிலை, உலகத்தின் மீது பிரகாசிக்கிறது என்று நாம் காண்கிறோம்; எனவே கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு எல்லாவற்றையும் முறு-முறுப்பில்லாமலும், தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள் என்று புத்திமதி கூறப்படுகிறது. (பிலி. 2:15,16).

தீமை ஆட்சி செய்யும் போது தேவனுடைய பரிசுத்தாவி உலகத்தார் மீது நேரடியாகப் பிரகாசிக்கிறதில்லை அல்லது அதன்மீது செயல்படுகிறதில்லை என்று நாம் காண்கிறோம். மாறாக தேவனுடைய பரிசுத்த ஆவி, மனம் அல்லது மனநிலை அதனால் முத்திரிக்கப்பட்டிருக்கிற அவருடைய ஜனங்களில் கிரியை நடப்பித்து, உலகத்திலுள்ள இருளின் மீது பிரகாசிக்கிறது. பரிசுத்த பவுல், பிரதிஷ்டை செய்யப்பட்ட சபையில், உலகத்தார் எப்படி பரிசுத்தத்தின் ஆவியால் கண்டிக்கப்பட வேண்டியதாயிருக்கிறது என்பதைக் குறித்து ஒரு குறிப்பை நமக்குத் தருகிறார். "**...வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்... கனியற்ற அந்தகார கிரியைகளுக்கு உடன்படாமல் அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள்... அவைகளெல்லாம் கடிந்து கொள்ளப்பட்டு வெளிச்சத்தினால் வெளியரங்கமாகும்.** (தவறானதென்று எடுத்துக் காட்டப்படும்)." எபே. 5:8,11,13.

தேவனுடைய சிந்தை அல்லது ஆவியை வெளிப்-படுத்துகிற அவருடைய சத்தியமாகிய வெளிச்சம், பரிசுத்தமாக்கப்பட்ட ஒரு ஜீவியத்தின் மூலமாக அது பிரகாசிப்பதால் பரிசுத்த ஆவியாக இருந்து, உலகத்-திலிருக்கிற இருளைக் கண்டித்து அதனைக் காண்பவர்-களுக்கு நீதிக்கு மாறுபட்டிருக்கிற பாவம் என்றால் என்ன என்பதை தெரியப்படுத்துகிறது. நீதியானது சில வெகுமதி-களையும், பாவமோ சில தண்டனைகளையும் பெற்றுக் கொள்ளும் போது (யோவா. 16:8-11) இந்த பிரகாசிப்பித்த-லிலிருந்து வந்து கொண்டிருக்கிற நியாயத்தீர்ப்பு பற்றிய தெளிவான நம்பிக்கை அவர்களுக்கு வந்து சேரும். சத்தியத்தின் எந்த வார்த்தையும் சாத்தியமில்லாத அல்லது சரியானதாக இல்லாத இடத்திலும் கூட தேவ பக்தியுள்ள ஒரு ஜீவியம் எப்பொழுதுமே துன்மார்க்கருக்கு ஒரு கடிந்து கொள்ளுதலாகவே இருக்கிறது.

## ஆரோக்கியமான பேச்சு

"**அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்ல வேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறின-தாயுமிருப்பதாக**" (கொலோ. 4:6, ASV). ஆம். ஏற்ற காலத்தில் சரியாகச் சொல்லப்படும் தேவனுடைய வார்த்தை வெள்ளித்-தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்கு சமானமாய் இருக்கிறது. நாம் நம்முடைய வார்த்தைகளைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். நம்முடைய வார்த்தைகள், நம்முடைய உரையாடல்கள், உலக காரியங்கள் அல்லது மத சம்பந்தமான காரியங்களாக பேசப்படும் போது கூட, எப்போதுமே கிருபை பொருந்தினதாயும் பக்திவிருத்தி உண்டாகும் படிக்கும் இருக்க வேண்டும். நம்முடைய உரையாடல்கள் எல்லாவற்றிலும் நிதானமான குணம் தனிச்சிறப்புள்ளதாய் அமைந்திருக்க வேண்டும். உலக மனிதர்களுடனும், அதைப் போலவே கிறிஸ்தவர்களுடனும் நம்முடைய ஈடுபாடுகள் எல்லாவற்றிலும் பட்சமும், இணக்கமும், உதாரத்துவமும் மற்றும் அவர்களுடைய நலன்கள் பற்றி அன்பிரக்கத்துடன் கருத்தில் கொண்டு கவனிக்கப்படுதலும் தெளிவாகக் காணப்பட வேண்டும். நம்மிடத்தில் அவர்-களுடைய அப்படிப்பட்ட அன்பான கவனிப்பு குறைவாக காணப்படுவது தெளிவாகவே வெளிப்பட்டாலும் கூட நாம் கனிவுடன் நடக்க வேண்டும். நம்முடைய பேச்சு உதாரத்துவமாகவும், மிதமானதாகவும், கண்ணியமாகவும், இரக்கமுள்ளதாகவும், அன்பினால் தூண்டப்பட்டதாகவும் இருக்க வேண்டியது மட்டுமல்லாமல், அது உப்பால் சாரமேற்றப்பட்டதாகவும் கூட இருக்க வேண்டும். சத்தியமும் அதன் ஆவியும் உப்பைப் போலவே சுத்திகரிக்கும் செல்வாக்கைக் கொண்டிருப்பதோடுகூட, நன்மையானதை-யும் சுத்தமானதையும், கெட்டுப்போகாமல் பாதுகாக்கும் வல்லமையையும் கொண்டிருக்கிறது.

நம்முடைய பேச்சு கிருபை நிறைந்ததாகவும், ஆரோக்கியமானதாகவும், தூய்மையானதாகவும் மற்றவர்கள் மீதான அதன் செல்வாக்கினால், அழியாது காக்கிறதாகவும் இருக்க வேண்டுமானால் நாம் நம்முடைய இருதயங்களை எல்லா காவலோடும் காத்துக் கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கும், ஏனெனில் இருதயத்-திலிருந்து தான் ஜீவஊற்றுகள் புறப்படும் (நீதி. 4:23); மேலும் "**இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்: நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக் காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக் காட்டுகிறான்.**" (மத். 12:34,35). வார்த்தைகளுக்கு அர்த்தமுண்டு, ஆகவே அவைகள் நாம் யார் என்பதை சுட்டிக் காட்டுபவையாக ஆகின்றது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுவைப் பொறுத்த வரையில் அவருடைய இருதயம் பூரணமாயிருந்தது. அவரில் எவ்வளவேனும் பாவமில்லை, அவருடைய வாயில் வஞ்சனை காணப்படவுமில்லை, "**உம்முடைய உதடுகளில் அருள் பொழிகிறது.**" மீண்டுமாக "**எல்லாரும் அவருக்கு நற்சாட்சி கொடுத்து அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்**" (சங். 45:2; லூக். 4:22) என்றும் சொல்லப்பட்டுள்ளது. மோசே கிறிஸ்துவை உருவகப்படுத்தி, கர்த்தருடைய வார்த்தைகளின் ஆசீர்வாதமான செல்வாக்குகளை முன்னறிவித்தார்: "**மழையானது இளம்பயிரின் மேல் பொழிவது போல என் உபதேசம் பொழியும்: பனித்துளிகள் புல்லின் மேல் இறங்குவது போல என் வசனம் இறங்கும்**" (உபா. 32:2) என்று

கூறினார். “**இயேசு, நான் உங்களுக்கு சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது**” (யோவா. 6:63) என்று சொன்னார். கர்த்தருடைய வார்த்தைகள் அவ்வளவு ஞானமுள்ளதாகவும், நீதியுள்ளவையாகவும், உண்மையானதாகவும் இருந்தன. அவருடைய விரோதிகள் தொடர்ந்து அவரிடத்தில் குற்றம் கண்டுபிடிக்க வகை தேடிய போதும், அவர்கள் அவரை ஜனங்களுக்கு முன்பாக பேச்சிலே குற்றம் பிடிக்கக் கூடாமல், அவர் சொன்ன உத்தரவைக் குறித்து ஆச்சரியப்பட்டு மவுனமாயிருந்தார்கள் (லூக். 20:26) என்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்றவர்களோ, அந்த மனுஷன் பேசுகிறது போல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை என்றார்கள். (யோவா. 7:46).

இவ்வாறாக, நம் கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்குத் தகுதியான முன்மாதிரியை விட்டுச் சென்றுள்ளார், அதை அப்போஸ்தலன் நம்முடைய பாட வசனத்தில் நாம் பின்பற்றும்படி வலியுறுத்துகிறார், மேலும் பரி.பேதுரு (1 பேது.4:11); “**ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்**” - அதாவது ஞானமாகவும், கர்த்தருடைய ஆவி மற்றும் வார்த்தைக்கு இசைவாக இருக்க வேண்டும் என்றும் புத்திமதி கூறுகிறார். மீண்டும், “**உன் நாவை பொல்லாப்புக்கும், உன் உதடுகளை கபட்டு வசனிப்புக்கும்** (வஞ்சகம்) **விலக்கி காத்துக் கொள். தன் வாயையும் நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை, இடுக்கண்களுக்கு விலக்கி காக்கிறான்.**” “**ஞானியினுடைய வாய்மொழிகள் தயையுள்ளவைகள்: மூடனுடைய** (புத்தியில்லாமல் சிரத்தையில்லாமல் பேசுகிறவன்) **உதடுகளோ அவனையே விழுங்கும்.**” அவன் வாய்மொழிகளின் துவக்கம் மதியீனமும், அவன் வாக்கின் முடிவு கொடிய பைத்தியமுமாம் என்று எழுதப்பட்டிருக்கிறது. (சங். 34:13; நீதி. 21:23; பிர. 10:12,13). சங்கீதக்காரனின் வார்த்தைகளின்படி (சங். 19:14), “**என் கன்மலையும், என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும் உமது சமூகத்துக்கு பிரியமாய் இருப்பதாக**” என்று நம்முடைய ஜெபம் இருக்கும்படியாக பார்த்துக் கொள்வோமாக!




## முதலாவது நீதி – பின்பு அன்பு

ஜாக்கிரதையாய் கவனத்தில் கொள்ள வேண்டிய நம்முடைய முடிவான கோட்பாடு நீதியாகும். தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகள் வேதாகமத்தில் அன்பின் பிரமாணத்தைக் கண்டு மற்றும் அன்புக்கு முந்தியிருக்கிற ஒரு பாடத்தை மறந்து விடுகிறார்கள். இந்த பிரதானமான பாடத்திற்கு தான் நாம் நம்முடைய கவனத்தை இந்நாளில் கொண்டு வருகிறோம். இது நியாயமாகிய நீதியைப் பற்றிய பாடமாகும். எச்சரிக்கையாயிரு என்பது மெய்யாகவே நியாயம் செய்வதற்கு விழித்திடு! என்பதை முக்கியப்படுத்திக் காட்டுகிறது. நாம் எல்லாரும் தவறிலிருந்து சரியானதை வேறுபடுத்திப் பார்க்கவும், எது சரி, நியாயம் என்பதை பயிற்சி செய்யவும் கற்றுக்கொள்ள வேண்டும். நியாயமே நீதியாயிருக்கிறது.

தங்க பிரமாணமாகிய நியாயத்தின் கோட்பாட்டை அவனுடைய வீட்டிலோ அல்லது கிறிஸ்துவின் சபையிலோ அல்லது தொழிலிலோ அல்லது சமூக தொடர்புகளிலோ மீறிக் கொண்டிருந்தால், அவன் ஒரு கிறிஸ்தவனாக இருந்தால், அவன் ஊக்கமாகவும் ஜெபத்துடனும் இந்த விஷயத்தை பரிசோதித்துப் பார்ப்பதுடன், பாவஞ் செய்யாமல் நீதிக்கென்று (நியாயம்) விழித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு நியாயத்திற்கு எதிராக வன்முறையில் இறங்குவது பாவமாகும்; மேலும் நம்முடைய அறிவுக்கெட்டிய வரைக்கும், இந்த பாவமே எங்கும் பரவலாக காணப்படுகிறது. அநேகர் இந்த உண்மையைக் குறித்து சரியான புரிந்துகொள்ளுதலில் இல்லை. நியாயமே எல்லா குணலட்சணங்களுக்கும், எல்லா சரியான ஜீவியத்துக்கும் அடிப்படையாக இருக்கிறது என்பதை அவர்கள் காண்கிறதில்லை. இதுவே தேவனுடைய சிங்காசனத்தின் ஆதாரமாக இருக்கிறது. (சங். 89:14). எவராவது ஒருவர் தன்னுடைய உடன் சிருஷ்டிகளிடம் அல்லது தேவனிடமாகவும் அன்பை பயிற்சி செய்யும் அதே சமயம், அவர்களுக்கு எதிராக நியாயத்தின் கோட்பாட்டை அவன் மீறுகிறதாக இருந்தால், அது வீண் ஆகும். நாம் நியாயத்தை நிறைவேற்றிய பிறகு மட்டுமே, பிறரிடம் நாம் அன்பை பயிற்சி செய்ய சுயாதீனமுள்ளவர்களாயிருக்கிறோம். அதன் பின்பு தான் அன்பின் வரிசையினூடாக நாம் நம்மால் முடியும் அளவு செயல்படலாம். முதலாவது நியாயம், அதற்கு பின்புதான் அன்பு என்பதே மற்றவர்களுடனான நம்முடைய அனைத்து நடவடிக்கைகளையும் நிர்வகிக்கும் விதியாக இருக்க வேண்டும்.

இது கேள்வியை எழுப்புகிறது: நம்முடைய சரீரங்கள் அபூரணமாயிருக்கும் போது, எப்படி நாம் சித்தத்தில் பூரணமாயிருக்க முடியும்? அப்போஸ்தலன் சொன்னது போல நாம் பதிலளிக்கிறோம். நன்மை செய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மை செய்வதோ என்னிடத்திலில்லை. (ரோம. 7:18). தம்முடைய சித்தத்தை நீதிக்காக செயல்படுத்துவதில் எப்போதுமே அவர் வெற்றிபெற்றுவிடவில்லை. அப்படியே இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்க தேடுகிற ஒவ்வொருவர் விஷயத்திலும் இருக்கிறது. சரியாக சித்தம் (விருப்பம்) கொள்வது எப்படி என்பதைப் பற்றி நாம் எல்லாரும் அறிந்திருக்கிறோம், ஆனால் சரியாகச் செய்வது எப்படி என்பதே பிரச்சினையாயிருக்கிறது. தேவன் நம்முடைய சரீரத்தின் அபூரணங்களின்படி நம்மை நியாயந்தீர்க்கமாட்டார் என்பதைப் படிப்படியாக நாம் கற்றுக் கொள்கிறோம்; ஏனெனில் நாம்

உண்மைத்துவமுள்ளவர்களாக இருப்பது வரைக்கும், இந்த குறைகள் கிறிஸ்துவின் சாட்டப்பட்ட நீதியின் வஸ்திரத்தால் மூடப்படுகின்றன. எனவே நாம் ஒவ்வொரு செயலிலும், வார்த்தையிலும், எண்ணத்திலும் சரியானதைச் செய்ய கடுமையாக முயற்சி செய்கிறோம் என்பதை நம் பரலோக பிதாவிடம் எடுத்துக் காட்ட நம்மால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும். அவர் தம்முடைய குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் பூரணமான ஒரு சித்தத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்ப்பார்ப்பதால், நம்மைக் குறித்து தேவனுடைய சித்தம் என்ன என்பது ஒரு தனிப்பட்ட கேள்வியாக மாறுகிறது. எனவே நன்மையானதும், ஏற்றுக் கொள்ளக் கூடியதும், தேவனுடைய பூரணமான சித்தமும் என்ன என்பதை நிரூபிக்க நாம் ஜாக்கிரதையாகத் தேடுகிறோம். (ரோம. 12:1,2).

தேவனுடைய சித்தம் என்ன என்பதை நிரூபிப்பதற்கு, அவருடைய சித்தம் பற்றி அறிவுக்கு வருவதும் அதை நமக்காக செய்து காட்டுவதாகும். நாம் உண்மையுள்ளவர்களாயிருந்தால், நாட்கள் செல்லச் செல்ல நாம் இதில் அதிகமதிகமாக முன்னேறிச் செல்கிறவர்களாயிருப்போம். முதலில் நாம் கொஞ்சம் அறிவையே பெற்றிருந்தோம். அதை நாம் செயல்பாட்டில் கொண்டு வந்தோம். நாம் கிருபையிலும், அறிவிலும் வளர்ந்ததால், தேவனுடைய சித்தத்துக்கு மிகவும் பழக்கமுள்ளவர்களாக மாறினோம். அத்துடன் இந்த அதிகரித்த அறிவை செயல்பாட்டிலும் கொண்டு வருவது நம்முடைய கடமையாக இருந்தது. தேவனுடைய சித்தத்தைப் பற்றிய இந்த அறிவை, எந்த இயற்கைக்கு அப்பாற்பட்ட வழியிலும் அல்ல, ஆனால் வேதாகமத்தைப் படிப்பதன் மூலமாகவே நாம் பெற்றுக் கொண்டோம். (2 தீமோ. 2:15).

தேவனுடைய குடும்பத்துக்குள் வந்து சேர்ந்தவர் யாராயிருந்தாலும், அவர் தன்னுடைய சொந்த சித்தத்தை விட்டுவிட்டு, அதற்கு பதிலாக தேவனுடைய சித்தத்தை ஏற்றுக் கொள்வான். தன்னுடைய சொந்த சித்தத்தை கர்த்தருக்கென்று ஒப்புக் கொடுக்காத எவரும் அவருடைய பிள்ளை அல்ல. அப்போஸ்தலன் அறிவிக்கிறது போல, கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. (ரோம. 8:9). கிறிஸ்துவின் ஆவி என்பது பிதாவின் சத்தத்திற்கு முழுமையாக ஒப்புக் கொடுக்கிற ஆவியாயிருந்தது; நாம் இதே நிலைமைக்கு வந்து சேர்வதால், நாம் நம்முடைய சொந்த சித்தங்களை விட்டுவிட்டு, அதற்கு பதிலாக, தேவ சித்தத்தை எடுத்துக் கொள்கிறோம். இதையே நாம் செய்கிறோம், ஏனெனில், தம்முடைய மீட்பரின் அடிச்சுவடுகளில் பின்பற்ற விரும்புகிற எல்லாருக்கும் இதுவே சரியான பாதையாக இருக்கிறது. ஏனெனில் நம்முடைய சொந்த சித்தங்கள் நமக்கே திருப்தியற்றதென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மனங்களும், நம்முடைய சரீரங்களும் மிகவும் அபூரணமாக இருப்பதால், நம்முடைய சொந்த சித்தத்தை செய்வதன் மூலமாக நாம் அடிக்கடி கஷ்டத்துக்குள்ளாகியிருக்கிறோம். ஆகவே, தேவனுடைய சித்தமே முக்கியமாக மிகவும் கிருபையுள்ள ஒரு சித்தமாக இருப்பதாக நாம் கண்டு கொண்டதிலிருந்து, அதை அறிந்து கொள்வதிலும், செய்வதிலும் நாம் மகிழ்ச்சியடைகிறோம். ***

# யூதர்கள் யூதர்களாகவே நிலைத்து இருக்க வேண்டும் Jews To Remain Jews

"என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள்: எருசலேமுடன் பட்சமாய்ப் பேசி, அதின் போர் முடிந்தது என்றும், அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்றும், அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது என்றும், அதற்குக் கூறுங்கள் என்று உங்கள் தேவன் சொல்லுகிறார்." ஏசா. 40:1,2.

வனாந்திரத்திலிருந்து ஒரு சத்தம் தொனிக்கிறது, எவ்விடத்திலுமுள்ள யூதர்கள் அதை கவனித்துக் கேட்கிறார்கள். அது அவர்களை கிறிஸ்தவர்களாக மாறுவதற்கென்று அழைக்காமல், யூதர்களாகவே இருக்கவும், யூதர்களாக நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளிலும், கர்த்தரால் அவர்களுக்கு முன்வைக்கப்பட்ட நோக்கங்களை உணர்ந்து கொள்வதற்காகவுமே அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறாக சரியாக பயிற்சி செய்த எல்லோருக்கும், அதன் மூலமாக மிகப்பெரிய ஆசீர்வாதம் நெருங்கி வருகிறது. அது கடந்த கால துயரங்களை ஈடு செய்வதைக் காட்டிலும் அதிகமாக இருக்கும். இஸ்ரயேல் பெறப்போகிற மாபெரும் வெற்றி பட்டயத்தாலும் அல்ல, துப்பாக்கிகளினாலுமல்ல, யுத்தக் கப்பலாலுமல்ல, விமானங்களினாலுமல்ல, நீர்மூழ்கி குண்டுகளினாலுமல்ல, அணுகுண்டுகளினாலுமல்ல; பணத்தின் பெலத்தினாலோ, நிதியாதாரமாகிய பொன்



கன்றுக் குட்டியை தொழுது கொள்வதினாலோ, மாம்ச புயத்தை நம்பியிருப்பதினாலோ அல்லாமல், தங்கள் உதவி, வருவதாயிருக்கிற கர்த்தரையே நோக்கிப் பார்ப்பதில் தான் இருக்கிறது. எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன், வானத்தையும்,

பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும். (சங். 121:1,2).

மேசியாவின் ஆவிக்குரிய சாம்ராஜ்யம், ஸ்தாபிக்கப்படும் போது, சாத்தான் கட்டப்பட்டு, ஒவ்வொரு தீமையும் தடுக்கப்பட்டு, ஜனங்களுக்காக ஒரு கொடி உயர்த்தப்பட்டிருக்கும் (ஏசா. 49:22; 62:10). அது இஸ்ரயேலை ஆசீர்வதித்து, பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கைக்குப் (எரே. 31:31-34; 32:36-40) பதிலாக புதிய (நியாயப்பிரமாண) உடன்படிக்கையையும் மகா பெரிய மோசேயைக் காட்டிலும் இன்னும் அதிக திறமையானவரான சிறந்த மத்தியஸ்தரின் கீழும் (உபா. 18:15,18,19), சாலமோனைக் காட்டிலும் அதிக ஞானமுள்ளவரான சிறந்த ராஜாவின் கீழும், தாவீதைக் காட்டிலும் தேவனுக்கு அதிக பிரியமானவரின் கீழும் அவர்களுக்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இந்த மாபெரும் ஆவிக்குரிய ராஜ்யம் உபத்திரவ காலத்தில், பூமியில் தத்தளிப்பின் காலத்தில் உலகத்தில் ஸ்தாபிக்கப்படும். அதை தீர்க்கதரிசனங்கள் மகா பயங்கரமானதாக சித்தரிக்கின்றன. (தானி. 12:1; எரே. 25:29-33; செப். 3:8,9). யூதர்களும், புறஜாதியாரும், ஐசுவரியவான்களும், ஏழைகளும் இந்த மிக பயங்கரமான உபத்திரவம் வந்து கடந்து செல்வதற்கு பொறுப்பாளியாகிறார்கள். தற்போது உலகத்தை ஆள்கிறதான பொதுவுடைமை கொள்கைகள் மற்றும் சமதர்ம கொள்கைகள் கர்த்தரால் பயன்படுத்தப்பட்டு, குறைந்தபட்சம் மேலோட்டமாகவாவது பிரம்மாண்டமானதாக இருக்கிற தற்போதைய மாபெரும் நாகரீகத்தை அழித்துப் போடும்.

சமதர்ம வார்த்தைகளாகிய பீரங்கியும், அதைப் போலவே ஒத்த இயல்புடைய திருச்சபையாகிய வெடிகுண்டுகளும் சண்டையை மேலும் மோசமாக்க மட்டுமே செய்யும். நிதி சுமைகளும், அதைத் தாங்குகிற விசைகளும் இந்த உபத்திரவ காலத்தில், நாகரீக வளர்ச்சி வேகத்தின் மாபெரும் வீழ்ச்சியை சரி செய்வதற்கு நிறைய காரியங்கள் செய்ய வேண்டியதிருந்தது, செய்ய வேண்டியதிருக்கிறது. அதில் பாவம், அக்கிரமம், அநீதி மற்றும் சுயநலம், ஆளுகை செய்கிறதால், இது இனி என்றென்றைக்குமாக எழும்பிடாதவண்ணம் விழுந்து போகும். ஏனெனில் தற்கால மத சம்பந்தமான அமைப்புகளும் கூட குறைவுள்ளதாக காணப்பட்டு, அகன்று போகும். ஏனெனில் தற்கால "வானங்களும், பூமியும்" என்று அடையாளமாக அழைக்கப்படுகின்ற இந்த பழைய அமைப்புகளுக்கு பதிலாக, புதிய வானமும், புதிய பூமியும் ஏற்படுத்தப்படும். (ஏசா. 65:17; 66:22), மகா பெரிய மேசியாவும், பூமியின் மீது சீரமைக்கப்படும் சமுதாயமும் நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும், புதிய பூமியுமாக இருக்கும். அந்த மாறுதல், மேசியாவின் நீதியான மேற்பார்வையின் கீழ் மகிமையான நித்திய ஆசீர்வாதத்துடன் ஒப்பிடுகையில் ஒரு கண நேர சோதனையே தவிர மற்றபடியல்ல. அவர் பூமியின் கடைமுனை மட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார். (சங். 46:9).




உலகம் முழுவதற்குமான கடன் என்பது, அரசாங்கங்கள், வணிகங்கள் மற்றும் குடும்பத்தினர்கள் உட்பட உலக முழுவதிலுமுள்ள எல்லா துறைகளுக்கும் சொந்தமான மொத்த பணத்தொகையாயிருக்கிறது. மே. 2024-ன் படி (The Institute of International Finance) சர்வதேச நிதி நிறுவனம் உலகின் கடன் சுமை 315 டிரில்லியன் டாலரை அடைந்துவிட்டதாக அறிவித்தது. அது மிகப் பெரியதும், மிக வேகமானதும், இரண்டாம் உலகப்போர் முதற் கொண்டு மிகப்பரவலாக அதிகரித்து வருவதாயுமிருக்கிறது. இந்தக் கடன் சற்றேறக்குறைய உலகின் மொத்த வீட்டுக்குரிய பொருளின் 100%க்கு சரிசமமாக இருக்கிறது. ஆகஸ்டு 16, 2024, அன்றைய நிலவரப்படி US-ன் மொத்த தேசிய கடன் $ 35.17 டிரில்லியன் ஆக இருக்கிறது. இது பொது ஜனங்களின் கடன், அதைப் போலவே கூட்டாட்சி அறக்கட்டளை நிதிகள் (Federal Trust Funds) மற்றும் பிற அரசாங்க கணக்குகளின் கடன்கள் ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

2024-ன் முதல் காலப்பகுதியில், இஸ்ரயேலின் தேசிய கடன் அக்டோபர் 7, 2023-ம் தேதி தொடங்கிய, இஸ்ரயேல் - ஹமாஸ் யுத்தத்தில் அதிகரித்து 341 பில்லியன் ஆனது. 2024 ஆகஸ்டு 22 அன்று அல்ஜஸீரா அறிக்கையின்படி மதிப்பீட்டு அறிக்கை GDP-யின் பற்றாக்குறை 2023-ல் 4.1%-லிருந்து மேல் நோக்கி அதிகரித்து 2024-ல் 7.8% ஆகிவிட்டதைத் தெரிவித்தது, அந்த கடன் வருடத்தின் மத்திய காலப்பகுதியில் GDP-யின்70%க்கு அதிகமாக இருக்கும் என்றும் அந்த அறிக்கை குறிப்பிட்டிருந்தது.

இஸ்ரயேல் தேசத்தைப் பற்றிய சில நிகழ்வு உண்மைகளை நாம் கவனிப்போம்! இஸ்ரயேல் தேசம் என்று மே 14, 1948-ம் தேதி, நடுராத்திரியில், யூத அமைப்பின் தலைவராகிய டேவிட்பென், குரியன் இஸ்ரயேல் தேசம் ஸ்தாபிக்கப்படுவதற்கான அறிக்கையில் கையெழுத்-

திட்டபொழுது பிரகடனம் செய்யப்பட்டது. பாலஸ்தீனத்திலுள்ள யூத ஜனங்களையும், சீயோனிஸ இயக்கத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய கவுன்சிலின் அங்கத்தினர்களால் அந்த அறிக்கை கையெழுத்திடப்பட்டது. அதே நாளில் அதிபர் ஹாரி S. ட்ரூமேன் என்பவர் புதிய தேசத்தை சட்டப்பூர்வமான யூத தேசமாக அங்கீகரித்து அவ்வாறு செய்த முதல் உலகத்தலைவராக ஆனார். ட்ரூமேன் எடுத்த முடிவு வெள்ளை மாளிகை ஊழியரிடமிருந்து அதிகமான கலந்துரையாடல் மற்றும் அறிவுரைக்கும் பின்பு எடுக்கப்பட்டு வந்தது. அங்குள்ள சிலர் யூத மாகாணத்தை உருவாக்குவது படுகொலை (ஹோலோகாஸ்ட்) சம்பவத்திற்கு ஒரே சரியான பதில் செயலாயிருந்ததாக எண்ணினார்கள், அதே சமயம் மற்றவர்களோ அந்த பிரதேசத்தில் அதிகமான மோதலை உருவாக்குவதை குறித்து கவலைப்பட்டனர்.

இஸ்ரயேலுக்கு ஆதரவாக இல்லாத சில முக்கியமான தேசங்களை நாங்கள் பெயரிட்டுச் சொல்கிறோம்: ஜப்பான், சீனா, ரஷியா, தென்கொரியா, வடகொரியா, இந்தியா, பாகிஸ்தான், ஈரான், இத்தாலி, ஆப்கானிஸ்தான், கிரீஸ் மற்றும் பிற அநேக நாடுகள். தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகள் என்ற வகையில் நாம் தேவனுடைய வார்த்தையை நம்முடைய வழிகாட்டியாக உறுதியாக பற்றிக் கொள்கிறோம்: அவற்றில் ஒன்று: "**உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன்: அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம் பண்ணுவார்கள், ஆனாலும் உன்னை மேற்கொள்ள மாட்டார்கள்: உன்னை இரட்சிப்பதற்காவும், உன்னைத் தப்புவிப்பதற்காகவும், நான் உன்னுடனே கூட இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.**" எரே. 15:20. வசனம் 21, "**நான் உன்னை பொல்லாதவர்களின் கைக்கு தப்புவித்து, உன்னை பலவந்தரின் கைக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்**" என்கிறார்.

தேவன் இஸ்ரயேலருக்கு, அவர்களுடைய தள்ளப்பட்ட நிலைமையிலும், அவர்கள் ஒரு ஜனமாக நிலைத்திருப்பதிலிருந்து, அழிக்கப்பட்டு போவதில்லை என்று வாக்குத்தத்தத்தை கொடுத்ததுடன், அவர்கள் தேவ தயவை இழந்திருந்த காலத்தின் போது அவர்களைக் கொடுமையாக நடத்தின தேசங்கள் எதிர்மறை நிலையில் ஆழ்த்தப்படுவார்கள் என அறிவித்தார். "**உன்னை இரட்சிப்பதற்காக நான் உன்னோடே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்: உன்னைச் சிதறடித்த எல்லா ஜாதிகளையும் நான் நிர்மூலமாக்குவேன்: உன்னையோ நான் நிர்மூலமாக்காமலும், முற்றிலும் தண்டியாமல் விடாமலும் மாட்டாய்த் தண்டிப்பேன்.**" (எரே. 30:11).

பூமியின் முகப்பரப்பினில் இஸ்ரயேல் மட்டுமே அழிக்கப்பட முடியாத தேசமாயிருக்கிறது, அதன் தோற்றமும் அதன் பாதுகாப்பும் வியக்கத்தக்க அற்புதமாயிருந்ததுடன் அது இப்போதும் தனக்கு வாக்களிக்கப்பட்ட மறுசீரமைப்பிலும் வியக்கத்தக்கதாகவே இருக்கிறது. இஸ்ரயேல் ஒரு தேசமாக நிலைத்திருப்பதற்கான ஒரே விளக்கம் தேவனுடைய வாக்குத்தத்தமும், உண்மைத்துவமும் தான். உலகின் எல்லா தேசங்களின் மத்தியிலும் சிதறடிக்கப்பட்டாலும் கூட, யூதர்கள் புறஜாதியான தேசத்தினருடன் ஒருபோதும் ஒருங்கிணைந்து கலந்து இருந்ததில்லை. ஒருபோதும் இருக்க மாட்டார்கள். அவர்களுடைய ராஜ்யம் அழிய நேரிட்டாலும்கூட, அவர் யாக்கோபின் வம்சத்தை முழுவதுமாக அழித்துப் போடமாட்டார், ஆனால் இஸ்ரயேலரான தம்முடைய ஜனங்களின் சிறையிருப்பை மீண்டும் திரும்பக் கொண்டு வந்து, "**அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன்: நான் அவர்களுக்கு கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனி பிடுங்கப்படுவதில்லை**" என்று தேவன் வாக்களித்துள்ளார். (ஆமோ. 9:8,14,15). அவர்: "**நான் உங்களை ஜனங்களிடத்திலிருந்து சேர்த்து நீங்கள் சிதறடிக்கப்பட்ட தேசங்களிலிருந்து உங்களைக் கூட்டிக் கொண்டு, இஸ்ரயேல் தேசத்தை உங்களுக்கு கொடுப்பேன்**" (எசே. 11:17) என்று வாக்களித்தார். அந்த வாக்குத்தத்தம் நிச்சயமானது. இதை கவனியுங்கள்: "நான் கர்த்தர், நான் மாறாதவர்; ஆகையால் யாக்கோபின் புத்திரராகிய நீங்கள் நிர்மூலமாகவில்லை." (மல். 3:6).

1917 பால்ஃபர் அறிக்கையும், 1920-ல் அமுலுக்கு வந்த பாலஸ்தீனத்தின் பற்றிய பிரிட்டிஷ் ஆணை உருவாக்கம், சீயோனிஸ பின்னணியும் ஐரோப்பிய யூதர்கள் பாலஸ்தீனத்திற்கு பெருமளவில் இடம் பெயர்ந்து வருதலும், அரேபியர்கள், யூதர்கள் மற்றும் பிரிட்டிஷ்காரர்களுக்கிடையே மனஅழுத்தமும், மோதலும் ஏற்பட்டது. பிரிட்டனின் கொள்கைகள் அரபு மற்றும் யூதர்கள் இருவர் விஷயத்திலும் அதிருப்தியாயிருந்தது. அரேபிய எதிர்ப்பு 1936-1939 வரையிலான காலப்பகுதியில் வளர்ந்து பாலஸ்தீனத்தில் அரேபியர்களுக்கு எதிரான கலகத்தையும், அதே சமயம் யூத எதிர்ப்பு 1944-1947 காலப்பகுதியில் பாலஸ்தீனத்தில் யூத கிளர்ச்சியாகவும் வளர்ச்சியடைந்தது.

பாலஸ்தீனத்திற்கான ஐக்கிய நாடுகளின் பிரிவினைத் திட்டம் 1947 நவம்பர் 29 தேதி ஏற்றுக் கொள்ளப்பட்ட மறுநாளே, உள் நாட்டுப் போர் தொடங்கியது - அந்த திட்டம், பிரச்சினைக்குரிய பகுதியை அரபுதேசம், யூத தேசம் என்று இரண்டாகப் பிரித்து, விசேஷ சர்வதேச ஆட்சி அமைப்பு, எருசலேம் மற்றும் பெத்லகேம் நகரங்களை சுற்றி வளைத்து கவனித்துக் கொள்ளும்படி திட்டமிடப்பட்டது. 1948 ஏப்ரலிலிருந்து தொடங்கிய தொடர்ச்சியான தாக்குதல்களின் முடிவில், சீயோனிச படைகள் அதிகாரப்பூர்வமாக பாலஸ்தீனத்தில் யூத தேசத்தை ஸ்தாபிப்பதற்கான ஆயத்தத்தில் நகரங்களையும், பிரதேசங்களையும் பிடித்துக் கொண்டு, சீயோனிச தலைவர்கள், மே 14, 1948-ம் தேதி இஸ்ரயேலின் சுதந்திர தின அறிவிப்பை வெளியிட்டனர்.

ஐக்கிய நாடுகளின் பாலஸ்தீன பிரிவினைத் திட்டத்தைத் தொடர்ந்து இஸ்ரயேல் தன்னை சுதந்திர நாடாக அறிவித்த போது, அதற்கு அடுத்த நாள் காலையிலேயே முதல் யுத்தம் ஆரம்பித்தது; எகிப்து, ஈராக், ஜோர்தான், லெபனான் மற்றும் சிரியா உட்பட ஐந்து அரபு நாடுகள் இஸ்ரயேலைத் தாக்கியது. 10 மாத கால யுத்தம், பிரிட்டிஷ் பிராந்திய பகுதியிலும், சீனாய் தீபகற்பத்திலும், தெற்கு

லெபனானிலும் யுத்தம் நடந்தது. பல்வேறு போர் நிறுத்த காலப்பகுதியில் இடையிடையே தடைபட்டது. யூத ஜனத்தாருடன் தொடர்புடைய அடுத்தடுத்து நடந்த நிகழ்வுகள் அற்புதமானதாகவோ அல்லது அதில் சற்று குறைவாகவோ நடந்த நிகழ்வுகள் சிலவற்றை நாங்கள் பட்டியலிடுகிறோம்.

## ஜெனரல் ஆலென்பியினால் எருசலேம் பிடிக்கப்படுதல்:

எருசலேம் மிகக் கொடியதும், போரில் நன்கு பயிற்சி பெற்று தயார் நிலையிலிருந்ததுமான துருக்கிய துருப்புகளால் பாதுகாக்கப்பட்டிருந்த போதிலும், இந்த துணிச்சலான செயல் 1917-ல் ஒரு துப்பாக்கி குண்டு கூட வெடிக்காமல் நிறைவேற்றப்பட்டது, சரித்திரத்தில் தனிச்சிறப்பான நிகழ்வாகும். (யூதர்களின் நம்பிக்கைகளும், எதிர்கால பலன்களும் என்ற முதல் புத்தகத்தில் 42,43 பக்கங்களிலும், மீண்டும் எழுதப்பட்ட புத்தகத்தில் பக்கம் 46,47-லும் பார்க்கவும்).

## யூத தேசம் மீண்டும் பிறந்தது:

1948-ல் உருவான யூத தேசம் பத்தொன்பது நூற்றாண்டுகளாக தமக்கென்று தேசமே இல்லாமல், அதன் ஜனங்கள் உலகமெங்கம் பல தேசங்களிலும் சிதறடிக்கப்பட்டிருந்த நிலையில், திடீரென்று திரும்பி வந்த சேர்ந்து சுதந்திரமடைந்த ஒரு தேசமாக உருவெடுத்தது, தேசங்கள் பற்றிய சரித்திரத்தில் ஒரு போதும் இப்படிப்பட்ட வேறு எந்த நிகழ்வும் நடந்ததில்லை.

## 1948-1949-ல் இஸ்ரயேல் அடைந்த வெற்றி:

ஐந்து அரேபிய நாடுகளான எகிப்து, ஈராக், ஜோர்தான், லெபனான் மற்றும் சிரியா - இஸ்ரயேலை தாக்கியது. கோடிக்கணக்கான ஜனங்களும், நன்கு போர் பயிற்சி பெற்ற இராணுவங்களும் இஸ்ரயேல் சுதந்திர நாடாக மாறிய உடனேயே அதை அழித்துவிட வேண்டுமென்று உறுதி பூண்டன. தேசத்தில் அப்போதிருந்த 6,50,000 யூதர்களை அவர்கள் முற்றுகையிட்டிருந்த போது, அவர்கள் தங்கள் சேனைகளை ஒழுங்குபடுத்தி பயிற்சியளிக்க வேண்டிய நிலையில் இருந்தனர். மிகவும் குறைவான முறையில் ஆயுத ஏற்பாடுகளிலிருந்த போதிலும், யூதர்கள் ஆச்சரியப்படத்தக்க அதிரடியான வெற்றியை அடைந்தார்கள். யோசுவா எரிகோவைப் பிடித்தது போல, ஏதோ ஒரு வகையில் புத்திசாதுரியத்தைப் பயன்படுத்தினர். ஒலி பெருக்கிகளை பயன்படுத்துவதன் மூலமாக ஹையிஃபா (Haifa) கைப்பற்றப்பட்டது. சஃபெட்டில் சிறுபீரங்கிகளின் சத்தம், அச்சமயத்தில் ஏற்பட்ட இடிமுழக்கத்தின் சத்தத்தை அதிகப்படுத்தி அரேபியர்கள் பின்வாங்கும்படி செய்தது. போர் நடவடிக்கைகள் கொஞ்ச நாட்களே நீடித்தன, இஸ்ரயேலின் மகத்தான வெற்றிகள் மிக எதிரான நிலையில் வெல்லப்பட்டன. அந்த மிகச் சிறிய ஆதரவற்ற இஸ்ரயேல் தேசம் நிரந்தரமான தேசமாக மாறியது பற்றி உலகம் வியப்புடன் பார்த்தது. ஆதலால் நான் உங்களை ஜனங்களிடத்திலிருந்து சேர்த்து, "**நீங்கள் சிதறடிக்கப்பட்ட தேசங்களிலிருந்து உங்களைக் கூட்டிக் கொண்டு, இஸ்ரயேல் தேசத்தை உங்களுக்கு கொடுப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்**" (எசே. 11:17) என்று யேகோவா தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருப்பதை நாம் நினைவு கூருவோம்.

## இஸ்ரயேலின் வெற்றி - 1956:

1956-க்குள் எகிப்து அதிபர் நாசர் அரபு கூட்டமைப்பை உருவாக்கினார்; சூயஸ்கால்வாயை அவர் தேசியமயமாக்கி, இஸ்ரயேல் அதைப் பயன்படுத்துவதற்கு மறுப்பு தெரிவித்தார்; அரபு கூட்டமைப்பின் இராணுவம் ஏராளமாகக் கொண்டு வரப்பட்டு பாதுகாப்பு பணியை மேற்கொண்டனர். அக்டோபர் 29, 1956 அன்று டேவிட் பென்குரியன் அவர்கள், காதேஸ் போர் நடவடிக்கைக்கு (ஆபரேஷனுக்கு) அழைப்பு விடுத்தார். நெகேவிலுள்ள எகிப்திய சேனைகள் இஸ்ரயேலைத் தாக்க தயாராயிருந்தபோதிலும், திடீரென்று, சடுதியாக படுவேகமாக முன்னேறி வந்த இஸ்ரயேலின் மிகச் சிறியபடைக்கு முன்பாக குழப்பத்தில் சிதறடிக்கப்பட்டது. சில மணி நேரங்களில் எகிப்திய - வலிமையான படையை தோற்கடித்து கால்வாய் பக்கத்தில் நிலை கொண்டது. இஸ்ரயேல் ஏலாத் வளைகுடாவில் தாராளமாக கடற்பயணம் தொடரலாம் என்று ஐக்கிய நாடுகள் மூலமாக உறுதியளிக்கப்பட்டதால், இஸ்ரயேல் சீனாய் தீபகற்பத்தையும் காசா பிரதேசத்தின் பகுதிகளையும் விட்டுச் சென்றது.

## வேறு நாட்டுக்கு இடம் பெயர்ந்தவர்கள் திரும்புதல்:

இஸ்ரயேல் இப்போது 7,208,000 யூதர்களையும் 2,080,000 அரேபியர்களையும், மக்கள் தொகையாக கொண்டிருக்கிறது, அவர்களில் பெரும்பாலானோர் நூற்றுக்கணக்கான பிறநாடுகளிலிருந்து, கடந்த ஐம்பது ஆண்டுகளாக தங்கள் பிதாக்களின் தேசத்துக்கு வந்தவர்கள். இதற்கு சரித்திரத்தில் இணையான சம்பவம் வேறெதுவும் இல்லை, இது தீர்க்க தரிசனத்தின் தனிச்சிறப்பு மிக்க நிறைவேறுதலாகும். (ஏசா. 11:11,12; 43:5-7; எரே. 16:14-16; 32:37-42; எசேக். 36:22,24 பார்க்கவும்).

## இஸ்ரயேலின் பட்டணங்கள் மீண்டும் கட்டப்படுதல்:

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அநேக சந்தர்ப்பங்களில் இஸ்ரயேலின் பட்டணங்களின் அழிவைக் குறித்த தீர்க்கதரிசன நிறைவேறுதல்களை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இந்த பட்டணங்கள் சில அழிக்கப்படுதலும், திரும்ப கட்டப்படுதலும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. - உதாரணமாக: அஸ்கலோன்; செப். 2:7 (விவரங்களுக்கு ஆகஸ்ட் 1967, BS#377 பார்க்கவும்) மற்றவைகள் பொதுவாக

குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவற்றின் அழிவைப் பற்றியும் – தீர்க்கதரிசனங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன – இப்பொழுது அவைகளின் திரும்பக் கட்டப்படுதல் சிறப்பான வகையில் நிறைவேறிக் கொண்டு வருகின்றன. (லேவி. 26:31-33; ஏசா. 61:4; எசே. 36:33,38; ஆமோ. 9:11,12,14,15 பார்க்கவும்).

தேசத்தை மீண்டும் உரிமைகோருதல்: பட்டணங்கள் கட்டப்படுவதைக் காட்டிலும், இன்னும் அதிகமாக மனதை ஈர்க்கக்கூடியது, தேசத்தை மீண்டும் உரிமைகோருவதாகும். 1914-க்கு முன்பு வரை, அந்த தேசம் பெரும்பாலும் பாழான நிலையில் வறண்டு, தரிசு நிலமாக வெறுமையாயிருந்தது; மீட்டெடுத்து மறுசீரமைப்பு செய்வது சாத்தியமற்றதாகவே தோன்றியது: மனுஷனில்லாமலும், மிருகமில்லாமலும் அவாந்தரவெளியாய் கிடக்கிறதென்று நீங்கள் சொல்லுகிற இவ்விடத்திலும், யூதாவின் பட்டணங்களிலும் மனுஷ-னாவது, மிருகமாவது இல்லாத பாழான எருசலேமின் வீதிகளிலும் சத்தம் கேட்கப்படும் என்று கர்த்தர் சொல்லு-கிறார். (எரே. 33:10). ஆனால் இப்போது கற்பாறையான மலை பகுதிகளெல்லாம் காடுகளால் மூடப்பட்டிருக்கின்றன. நெடுஞ்சாலைகள் ஓரமாய் வரிசையாக பழத்தோட்டங்களும், திராட்சை தோட்டங்கள் மற்றும் அற்புதமாக விளைச்சலைக் கொடுக்கிற வளமான வயல்வெளிகள், தோட்டங்களுமாக உள்ளன. நீர்ப்பாசனத் திற்கான தண்ணீர் நெகேவ் பாலைவனத்திற்கு அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறாக அநேக இடங்களில் வனாந்திரம் ஏற்கனவே புஷ்பத்தைப் (rose-ரோஜாவை) போல் பூத்து குலுங்குகின்றன (ஏசா. 35:1,2; எசே. 36:8-11,29-36).

## எபிரெய மொழியின் மறுமலர்ச்சி :

இயேசுவின் முதல் வருகையின் நாட்களில், எபிரெய மொழி ஏற்கனவே மரித்துக் கொண்டிருந்த மொழியாக இருந்தது. அராமைக் (Aramaic) மொழி பேச்சு மொழி-யாகவும், கிரேக்க மொழி எழுத்து வடிவிலும் இருந்து வந்தது. 1948-க்கு பிறகு ஏராளமான எண்ணிக்கையில் இடம் பெயர்ந்து போனவர்களின் திரும்ப வருதலானது. அநேக நாடுகளிலிருந்த வரும் ஜனங்கள் ஒருவரையொருவர் புரிந்துக் கொள்ளும் பொருட்டு பொதுவான ஒரு பேச்சு மொழியையும், எழுத்து வடிவ மொழியையும் அவசியப் படுத்தியது. அதனால் எபிரெய மொழியைப் பயன்படுத்துவது நியாயமானதாயிருந்தது. எபிரெய பாஷை நாட்டின் அதிகாரப் பூர்வமான அலுவலக மொழியாகும், அநேகமாக மொத்த மக்கள் தொகையினரும், சொந்த நாட்டினர் என்ற வகையிலோ அல்லது திறம்பட இரண்டாவது மொழியாகவோ அதனை பேசுகின்றனர். அதன் தரமான வடிவம் நவீன எபிரெயு என்றழைக்கப்பட்ட, இஸ்ரயேலில் முதன்மையான வாழ்க்கை தொடர்பு மொழியாக இருக்கிறது. மெய்யாகவே எபிரெய மொழியின் மறுமலர்ச்சி தனிச் சிறப்புடையது, அது மிகுதியாக திரும்ப கூட்டிச் சேர்க்கப்பட்ட இஸ்ரயேலின் முன்னுரைக்கப்பட்ட ஒற்றுமையை நிறைவேற்றுவதில் உதவி செய்து வருகிறது. (ஏசா. 11:13; எரே. 3:18; எசே. 37:15-22 பார்க்கவும்).

## 1967-ல் ஆறுநாட்கள் யுத்தத்தில் இஸ்ரயேலின் வெற்றி:

சுமார் 2000 அயல்நாட்டு இராணுவ ஆலோசகர்-களுடனும், இராணுவ பலத்துடனும், இஸ்ரயேலின் போர்த்தளவாடங்களைக் காட்டிலும் பத்து மடங்கு சிறந்த அளவில் எண்ணிக்கையிலான போர்த்தளவாடங்களுடனும் அரேபியர்கள் எகிப்தின் அதிபராகிய நாசர் தலைமையில் அகாபா வளைகுடாவை வழிமறித்து முற்றுகையிடப் போவதாக அறிவித்தனர், அது இன்னொரு யுத்தத்தை விரைவாக்கி தூண்டியது. இஸ்ரயேலர்கள் மின்னல் வேகத்தில் தாக்கி மிகப்பெரிய அரபுப் படைகளை முறியடித்து, எகிப்து, ஜோர்டன் மற்றும் சிரியாவிடமிருந்து அதிகமான நிலப்பரப்புகளை எடுத்துக் கொண்டனர். (ஆகஸ்டு 1967 BS பார்க்கவும்)

## எருசலேம் ஒருங்கிணைக்கப்படுதல்:

1917-ல் துருக்கியர்களிடமிருந்து ஜெனரல் ஆலென்பி, எருசலேமைப் பெற்றுக் கொண்டதன் விளை-வாக யூதர்கள் அவ்விடத்தில் ஆக்கிரமித்து குடியிருக்கவும், கட்டிடம் கட்டவும், அனுமதிக்கப்பட்டார்கள். அது புதிய எருசலேம் என்று அறியப்படலாயிற்று; அனால் பழைய எருசலேம் சத்துருவின் கையில்தான் இருந்து வந்தது. பாலஸ்தீனம் பிரிவினைக்கு வழிவகுக்கும் தீர்மானம், நவம்பர் 29, 1947 அன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஹிட்லர் யூதர்களை படுகொலை செய்ததற்கான மறைமுகமான விளைவாக வந்து சேர்ந்தது; ஆனால் அது யூதர்களுக்கு பிரியமான பழைய எருசலேம் மீதான உரிமைகளை அவர்களுக்குக் கொடுக்கவில்லை. ஆறு நாட்கள் யுத்தத்தின் அற்புதமான வெற்றிகளில், பழைய நகரம் அவர்கள் கரங்களில் வந்து விழுந்தது. இவ்வாறு எருசலேமின் ஒருங்கிணைப்பு நிறைவேற்றப்பட்டது.

யூதர்கள் இப்போது, எருசலேமிலுள்ள புலம்பல் சுவருக்கு போய் அங்கே ஏறத்தாழ இருபது ஆண்டுகளில் முதல்முறையாக ஜெபிக்க முடியும் என்ற நிலையை ஏற்படுத்தியது. அந்த ஆலயம் இருந்த இடம் (அவர்களுக்கு அது பூமியின்மீது மிகுந்த பரிசுத்தமான இடமாகும்). ஏறத்தாழ இருபது நூற்றாண்டுகளில் முதல் தடவையாக யூதர்களுடைய கரங்களில் வந்து சேர்ந்தது என்பதையும் கூட அர்த்தப்படுத்தியது. இஸ்ரயேல் எருசலேமை ஒரு சுதந்திரமானதும், பிரிக்கப்படாததுமான நகரமாக முதன் முதலாக இருபத்து ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேலாக முழுமையாக சொந்தமாக கொண்டிருக்கிறது என்பதை அர்த்தப்படுத்துகிறது.

காலம் செல்லச் செல்ல, அரேபிய தேசங்கள் இஸ்ரயேலுடன் சமாதான ஒப்பந்தங்களைத் தொடர்ந்து தவிர்த்து வருவதால், இஸ்ரயேலின் நிலைமை அதிக பாதுகாப்பாக மாறி வருகிறது. பழைய நகரத்தில் ஏற்கனவே பல மாற்றங்களையும், மேம்பாடுகளையும் அவர்கள்

ஏற்படுத்தியிருக்கின்றனர். அத்துடன் விரைவாக பலவற்றையும் செய்கிறார்கள். அதைவிட்டு வெளியேறும் எண்ணம் இல்லை என்பது வெளிப்படையாக தெரிகிறது. இது ஐக்கிய நகரத்தின் ஒரு பகுதியாக மாறி, தனிப்பட்ட ஒரு அரசாங்கத்தால் நிர்வாகிக்கப்பட்டு வருகிறது.

## நாம் இப்போது சகரியா 14:14–ஐ கருத்தில் கொள்வோம்:

யூதாவும் எருசலேமிலே யுத்தம் பண்ணும் (RSV) இந்த வேதப்பகுதி எபிரெய பாஷையில் இதில், உள்ள, உடன் அல்லது எதிராக (at, in, with or against) ஆகிய முன்னிடைச் சொற்களைப் பயன்படுத்துவதன் மூலம் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. அவற்றில் எந்த ஒன்றும் ஏற்கத்தக்கதாகவே இருக்கிறது; ஆயினும் எதிராக (against) என்ற வார்த்தை அநேக அறிஞர்களால் மிகவும் சரியான மூல கருத்தை கொண்டு வரும் வார்த்தையாக சுட்டிக் காட்டப்படுகிறது. ஆயினும் சிலமொழிபெயர்ப்பாளர்கள் யூதா எப்படி தனக்கு பிரியமான நகரத்துக்கு எதிராக யுத்தம் பண்ணும் என்பதை அறிய முடியாதிருந்தார்கள், ஆகவே அவர்கள் இந்த தீர்க்கதரிசனத்தை, யூதா எதிரிகளைத் தாக்குவதற்கு எதிராக அதன் பாதுகாப்பில் அதனுடன் அல்லது அதில் எருசலே–முடன் யுத்தம் பண்ணும் என்று மொழிபெயர்த்தனர். ஆயினும் அப்படிப்பட்ட மொழிபெயர்ப்புகள் மார்ஜினில் திருத்தப்பட்ட அல்லது விருப்பமான முன்னிடைச் சொல்லான எதிரான (against) என்ற வார்த்தையை வழக்கமாக சுட்டிக் காட்டுவார்கள் (உதாரணமாக AV பார்க்கவும்) RSV யூத பப்ளிகேஷன் சொசைட்டி போலவே டோவே மொழிபெயர்ப்பு, லீசர் போன்ற மற்றவை முன்னிடைச் சொல்லான எதிரான (against) என்பதை எந்த வேறு வார்த்தையும் இராமல் சுட்டிக்காட்டினர்; லீசர் இந்த வேதப்பகுதியை "**யூதாவும் எருசலேமுக்கு எதிராக யுத்தம் பண்ணும்**" என்று மொழி–பெயர்க்கிறது.

சில வருடங்களுக்கு முன்பு வரை நிறைவேறுதல் சாத்தியமில்லாதது என்று கருதப்பட்ட தீர்க்கதரிசனங்கள் இந்நாளில் நிறைவேறி வருகிறது. பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடுகளிலுள்ள தீர்க்கதரிசனங்கள், நம்முடைய கர்த்தராகிய இயேசு தாமே சொன்ன தீர்க்க தரிசனங்கள் உட்பட சுவிசேஷ யுக முடிவு மற்றும் ஆயிர வருட யுகத்துக்குள் கொண்டு செல்லுதல் ஆகியவற்றைப் பற்றி குறிப்பிடுகிற நிலைமைகளையும் நிகழ்வுகளையும் குறித்துக் சொல்லிக் கொண்டு வருதல் இப்போது குறிப்பிடத்தக்க அளவில் நிறைவேற்றப்பட்டு, தினசரி செய்தியாக ஒளிபரப்பப்பட்டு வருகிறது. இந்த வகையில் 1967 தலைசிறந்த ஆண்டாக இருந்தது. உலகமனைத்தையும் திகைப்படையச் செய்த "ஆறு நாட்கள் யுத்தத்தின்" அற்புதத்தை இது சாட்சியிட்டது. எருசலேமுக்கு விரோதமாக யூதா யுத்தஞ் செய்வது என்பது எப்படிப்பட்ட முரண்பாடாக இருக்கிறது! இந்த தீர்க்கதரிசனம் சொல்லப்பட்ட காலத்திலிருந்து 1967–ம் ஆண்டு அவர்கள் அதற்கு விரோதமாக யுத்தஞ் செய்து, தீவிரமாக அதை எடுத்துக் கொண்டது வரைக்கும் யூதர்கள் ஒரு போதும்




தங்கள் சொந்த எருசலேம் நகரத்துக்கு எதிராக யுத்தம் செய்ததில்லை.


இந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதல் நம்முடைய நாளுக்காக வைக்கப்பட்டடிருக்கிறது, ஏனெனில் முந்தின வசனத்தில் நாம், "**அந்நாளிலே** (சாத்தானுடைய அடிமைத்–தனத்திலிருந்து கர்த்தர் தம்முடைய ஜனங்களை விடுவிக்கிற அந்த நாளை இந்த பின்னணி தெரிவிக்கிறது போல) **கர்த்தரால் பெரிய கலக்கம்** (1914ல் தொடங்கிய உலகத்தின் மகா உபத்திரவ காலத்தினால் அச்சம் மற்றும் குழப்பம் நேரிட்டது – தானி. 12:1; செப். 3:8; மத். 24:21; லூக். 21:25,26; வெளி. 16:14) **அவர்களுக்குள் உண்டாகும். அவனவன் தன்தன் அயலானின் கையைப் பிடிப்பான். அவனவனுடைய கை அவனவன் அயலானுடைய கைக்கு விரோதமாக எழும்பும் என்று வாசிக்கிறோம்.**" எனவே உலகம் தழுவிய இந்த மகா உபத்திரவ காலத்தில்தான் யூதர்கள் எருசலேமுக்கு விரோதமாக யுத்தம் பண்ணி அதை எடுத்துக் கொள்ள வேண்டியவர்களாயிருந்தார்கள்.

அந்த தீர்க்கதரிசனம் யூதர்களுக்கு, அவர்களுடைய எல்லா சத்துருக்கள் மீதான வெற்றியைச் சுட்டிக் காட்டுகிறது – அவர்கள் சுற்றிலும் இருக்கிற சகல ஜாதிகளுடைய (எபிரெய பாஷையில் Goyim தேசங்கள்) ஆஸ்திகளை (வசனம் 14) வளத்தை எடுத்துக் கொள்வதைக் காட்டிலும், குறைவானதையே செய்ய வேண்டியதாயிருந்தார்கள். "**பொன்னும், வெள்ளியும் வஸ்திரங்களும் மகாதிரளாகக் கூட்டப்படும்.**" அவர்களுடைய சத்துருக்களுடைய வளங்க–ளாகிய ஆஸ்திகளையும், அவற்றில் அதிகமானவை உடனடியாக எடுத்துக் கொள்ளப்பட்டதையும் குறிப்பிடுகிறது. அந்த வாதை சத்துருக்களுடைய பல்வேறு வகையான இராணுவ தளவாடங்கள் மீதும் பிரத்தியேகமாக அவர்–களுடைய போக்குவரவு சாதனங்களாகிய விமானங்கள், பீரங்கிகள் மற்றும் சரக்கு வண்டிகள் போன்றவைகள் விரைவாக ஓடிப்போனதுடன் அந்த ஆறு நாட்கள் யுத்தத்தில் மிகப் பெரும் அழிவும் நேரிட்டது. இன்னும் நிறைய காரியங்கள் நிறைவேற்றப்பட வேண்டியதாயிருக்கிறது; குறிப்பாக "**கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருக்கும்**" (சகரி. 14:9) போது இந்த மகா உபத்திரவ காலத்திற்கு பின்பு மனுக்குலத்தாருக்கு ஆசீர்வாதங்கள் வந்து சேரும் என்பதை நாம் கண்டுணர்ந்து கொள்கிறோம்.

கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியின் மூலம் கூடுதலான செய்தியைக் கொடுத்திருக்கிறார். எரே. 30 மற்றும் 31–ம் அதிகாரங்களின் மொத்த தீர்க்கதரிசனத்தின் தலைப்பை எரே. 30:1 உள்ளடக்கியிருக்கிறது: "கர்த்தராலே எரேமியாவுக்கு உண்டான வார்த்தை வசனங்கள் 2 மற்றும்

3 அறிமுகத்தை உருவாக்கி பகுதியை அனைத்து தீர்க்கதரிசனத்தின் பொருளை பின்வருமாறு தருகிறது: **இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் நான் உன்னோடே சொன்ன எல்லா வார்த்தைகளையும் ஒரு புஸ்தகத்தில் எழுதிக் கொள்** (தீர்க்கதரிசிகளின் எழுத்துக்கள் தெய்வீக அங்கீகாரம் பெற்றதாக மதிக்கப்படுகின்றன). **இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார்: அப்பொழுது நான் இஸ்ரயேலும் யூதாவுமாகிய என் ஜனத்தினுடைய சிறையிருப்பைத் திருப்பி, நான் அவர்கள் பிதாக்களுக்கு கொடுத்த தேசத்துக்கு அவர்களைத் திரும்பி வரப்பண்ணுவேன்: அதை அவர்கள் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.**" இந்த தீர்க்கதரிசனமானது வேதவாக்கியங்களில் எழுதப்பட வேண்டும்; இது (சுவிசேஷ யுகத்தின் போது) கற்றுக் கொள்ளப்பட்டும், மீண்டும் திரும்ப கொண்டு வருதல் பற்றிய உற்சாகப்படுதலுக்காக தியானிக்கப்பட்டும் வருகிறது; அதாவது இரண்டாவது முறையாக தேசத்திலிருந்த அகற்றப்பட்ட பிற்பாடு, இஸ்ரயேலின் இரண்டாவது திரும்பி வருதலாக, உன்னை சிதறடித்த எல்லா ஜாதிகளிடமிருந்தும் (வசனம் 11) தேவன் அவர்களுடைய முற்பிதாக்களுக்கு கொடுத்திருந்த பரிசுத்த தேசத்திற்கு கொண்டு வரப்பட்டு அவர்கள் அதை மீண்டும் சுதந்தரித்துக் கொள்வார்கள்.

வசனங்கள் 4-11, ஜாதிகள் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு நடப்பதைக் குறித்தும், அது இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரங்களுடைய விடுதலையை நிறைவேற்றுவதைக் குறித்தும் சொல்லுகிறது. இஸ்ரயேல் யாக்கோபின் இக்கட்டு காலத்திற்குள்ளாக வருவதால், அவர்கள் சமாதானத்தையும், சௌக்கியத்தையும் கொண்டிருப்பதற்கு மாறாக, அச்சத்தையே அனுபவிப்பார்கள் என்பதாக தேவன் இங்கே தீர்க்கதரிசனமாக உரைக்கிறார்; குழந்தை பெறும் ஸ்திரீகளின் கடுமையான திடீர் வலியை ஒருவர் கற்பனை செய்து கொள்ளத்தக்கதாக பெரும் அச்சத்துடன் மேற்கொள்ள வேண்டிய கடுமையான துன்பங்களின் அதிர்ச்சியான வலிகளுடன் இருப்பார்கள். அவர்களுடைய மிகப்பெரிய அச்சத்தின் காரணம் வசனம் 7-ல் அறிவிக்கப்படுகிறது: **ஐயோ! அந்த நாள் பெரியது: அதைப் போலொத்த நாளில்லை: அது யாக்கோபுக்கு இக்கட்டு காலம்: ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்.** இதுவே மகாபெரிய நியாயத்தீர்ப்பின் நாளாயிருக்கிறது. (2 பேது. 3:7,8). அது சுவிசேஷ யுகத்தின் அறுவடையுடன் யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலத்தையும் அறிமுகப்படுத்துகிறது. (தானி. 12:1; மத். 24:21). அந்த நாள் ("இந்த" அல்ல) பெரிதாயிருக்கும் "இந்த வார்த்தைகள் அப்பொழுது எதிர்காலமாக இருந்த காலத்தை சுட்டிக் காட்டுகின்றன. அவை யோவேல் 2:11-ல் சொல்லப் பட்டிருப்பதைப் போல உள்ளன. (எரேமியாவின் நாளுக்கு நீண்ட காலத்துக்கு முன்பே எழுதப்பட்டது); அவை மகா உபத்திரவ காலத்தை மறைமுகமாகக் குறிப்பிடுகின்றன: **கர்த்தருடைய நாள் பெரிதும் மகா பயங்கரமாயிருக்கும்.**" எரே. 30:7-ல் **அதைப் போலொத்த நாளில்லை என்றும்,** அது யோவே. 2:2-ல் "**....அப்படிப்பட்டது முன் ஒரு காலத்திலும்**




**உண்டானதுமில்லை, இனி... வரும் வருஷங்களிலும் உண்டாவதுமில்லை**" என்ற வசனத்திற்கு மிகவும் ஒத்ததாகவும் இருக்கிறது. இந்த நாள் யாக்கோபுக்கு உரியதாகும்; **அதாவது இஸ்ரயேலர் எல்லாருக்கும் மகாபெரிய தத்தளிப்பின் காலமாயிருக்கும்.**" வசனம் 7 அது யாக்கோபுக்கு இக்கட்டு காலம், ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான் என்றும் தெரியப்படுத்துகிறது.

எரே. 30:11, "**உன்னை இரட்சிப்பதற்காக நான் உன்னோடே இருக்கிறேன்**" என்று கர்த்தர் சொல்லுகிறார்; **உன்னைச் சிதறடித்த எல்லா ஜாதிகளையும் நான் நிர்மூலமாக்குவேன்: உன்னையோ நான் நிர்மூலமாக்காமலும் முற்றிலும் தண்டியாமல் விடாமலும், மட்டாய்த் தண்டிப்பேன்**" என்று கூறுகிறது. "**நான் உன்னோடே இருக்கிறேன்**" என்ற வார்த்தைகள் 9 வெவ்வேறான வேத வாக்கியங்களில் கொடுக்கப்பட்டிருப்பதைக் கவனிப்பது நலமானது. தேவனுடைய கட்டுப்பாட்டின் கீழ், பூமியின் முகப்பரப்பில் இஸ்ரயேல் மட்டுமே அழிக்கப்பட முடியாத ஒரே தேசமாய் இருக்கிறது. அது உருவானதிலும், அது காப்பாற்றப் படுவதிலும், வியக்கத்தக்க விதமாயிருப்பதுடன், இப்போதும் அதன் வாக்களிக்கப்பட்ட மறுசீரமைப்பு விஷயத்திலும் அற்புதமானதாகவே இருக்கிறது. இஸ்ரயேல் பிழைத்து இருப்பதற்கான ஒரே விளக்கம் தேவனுடைய வாக்குத்தத்தமும் அவருடைய உண்மைத்துவமும் தான். உலகத்தின் எல்லா தேசங்களின் மத்தியிலும் சிதறடிக்கப்பட்டிருந்த போதிலும் யூதர்கள் புறஜாதியாரோடு ஒருங்கிணைந்து கலந்திராமலேயே இருந்தார்கள், ஒரு போதும் அப்படி கலந்திடவும் மாட்டார்கள். அவர்களுடைய ராஜ்யம் அழிந்து போனாலும்கூட, அவர் யாக்கோபின் வம்சத்தை முழுவதுமாக அழித்துப் போடமாட்டார், ஆனால் இஸ்ரயேலரான தம்முடைய ஜனங்களின் சிறையிருப்பிலிருந்து மீண்டும் கொண்டு வந்து அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன்; நான் அவர்களுக்கு கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனி பிடுங்கப்படுவதில்லையென்று தேவன் வாக்களித்திருக்கிறார். (ஆமோ. 9:8,14,15). அவர்: "**நான் உங்களை ஜனங்களிடத்திலிருந்து சேர்த்து, நீங்கள் சிதறடிக்கப்பட்ட தேசங்களிலிருந்து உங்களைக் கூட்டிக் கொண்டு இஸ்ரயேல் தேசத்தை உங்களுக்குக் கொடுப்பேன்**" (எசே. 11:17) என்று வாக்களித்துள்ளார். அந்த வாக்குத்தத்தம் நிச்சயமானது. இதைக் கேளுங்கள்: "**நான் கர்த்தர், நான் மாறாதவர், ஆகையால் யாக்கோபின் புத்திரராகிய நீங்கள் நிர்மூலமாவதில்லை.**" (மல். 3:6). இஸ்ரயேலுடன் தேவன் வியக்கத்தக்க ஈடுபாடுகள் கொண்டிருந்த போதிலும்

2022-ஐப் பொறுத்த வரையில் இஸ்ரயேல் மக்கள் தொகையின் மத சம்பந்தமான இணைப்பு 73.6% யூதர்களும், 18.1% முஸ்லீம்களும், 1.9% கிறிஸ்தவர்களும், 1.6% ட்ரூஸ்களும் என்று இருந்தது.

ஆவிக்குரிய இஸ்ரயேலரை தெரிந்து கொள்வதற்கான சுவிசேஷ யுகம் AD 29 - AD 1874) முடிவுக்கு வருவதால் (விரிவாக்கப்பட்ட சுவிசேஷ யுக அறுவடையின் போது) தேவனுடைய சத்தம் மாம்ச இஸ்ரயேலை அழைத்துக் கொண்டு வந்து அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட தேசத்தைச் சுட்டிக் காட்டி அவர்களுடைய இருதயங்களை அவர்களுடைய தீர்க்கதரிசிகளின் செய்திகளைக் கொண்டு உற்சாகப்படுத்தியதால் பரிசுத்த தேசத்திற்கு அவர்கள் திரும்பி வர முடிந்தது. எரே. 31:1 நம்முடைய கவனத்தை தேவனுடைய ஜனங்களிடம் அவர் தொடர்ந்து காட்டிய அன்பிரக்கத்தைச் சுட்டிக் காட்டுகிறது: அக்காலத்திலே நான் இஸ்ரயேலின் வம்சங்களுக்கெல்லாம் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

## பேணி பாதுகாக்கப்பட வேண்டிய இஸ்ரயேல்

யோசுவா என்ற பெயருக்கு விடுவிக்கிறவர் அல்லது இரட்சகர் என்று அர்த்தமாகும். யோசுவா இஸ்ரயேலின் தலைவரானதும், அவர் தலைமையின் கீழ் அவர்கள் மிகப்பெரிய வெற்றிகளைப் பெற்று மெய்யாகவே உடன்படிக்கையில் வாக்களிக்கப்பட்ட தேசத்தில் பிரவேசித்தார்கள். அவர் தன்னுடைய 83-வது வயதிலும்கூட பெலனுள்ளவராகவும், மோசேயின் இடத்தைப் பெற்றுக் கொள்வதற்கு மிகவும் தகுதியான மனிதராகவும் இருந்தார் என்பது தெளிவாகத் தெரிகிறது. இருபத்தேழு வருடங்களாக யோசுவா இஸ்ரயேலின் தலைவனாக இருந்து தேவனுக்கும் ஜனங்களுக்கும் உண்மையுள்ளவராய் இருந்தார். அவர் ஜனங்களை யோர்தானைக் கடக்கச் செய்து அவர்களை நடத்திச் சென்றது மட்டுமல்லாமல் பட்டணத்துக்கு மேல் பட்டணமாக வெற்றி கொள்வதில் அவர்களை வழிநடத்தியது மட்டுமல்லாமல் கோத்திரங்களுக்கு மத்தியில் தேசத்தைப் பங்கிட்டு கொடுத்து, மிகச் சிறப்பாக ஜனங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர்களை ஆளுகை செய்து 110 வயதில் மரித்தார். மோசேயிடம் பொதுவான உதவியாளராகவும், தனிச் செயலராகவும் அவர் பெற்றுக் கொண்ட பயிற்சி தேவனுடைய திட்டங்கள் மற்றும் வழிமுறைகள் ஆகியவற்றுடன் அவருக்கு மிகவும் பழக்கம் ஏற்படுத்தியிருந்தது. ஜனங்களுடைய முதல் யுத்தத்தில் அவர்களுக்கு உத்தரவு பிறப்பித்து யுத்தத்தை வழிநடத்தும் பொறுப்பு அவரிடம் தான் ஒப்படைக்கப்பட்டிருந்தது. யோசுவா தான் சீனாய் மலைக்கு மோசேயுடன் சென்றிருந்தார். வேவுகாரர்களின் குழுவில் ஒன்றை நடத்திச் சென்றதும், நல்ல அறிக்கையை கொண்டு வந்து கொடுத்ததும், ஜனங்கள் தேவனிடத்தில் விசுவாசம் வைக்க வேண்டும் என்றும் வாக்களிக்கப்பட்ட தேசத்தை ஜெயம் கொள்ளவும், சுதந்தரித்துக் கொள்ளவும் தொடர்ந்து முன்னேறி செல்ல வேண்டும் என்றும் தைரியமாக மோசேயுடன் நின்று ஆலோசனை கூறினார்.

வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குள்ளாக ஜனங்களை வழிநடத்திச்சென்றது மோசே அல்ல; அது யோசுவா தான், அவர்களுடைய புதிய தலைவராக அவர்களை யோர்தானைக் கடந்து செல்ல வழிநடத்தியவர். மனுக்குலத்தார் வாக்களிக்கப்பட்ட பிரதேசத்திற்குள்ளாக பிரவேசிக்கப் போவது நியாயப்பிரமாணத்தினால் அல்ல, ஆனால் ஒரு இரட்சகராலேயே என்பது இவ்வாறாக இந்த அடையாளம் தெரிவிக்கிறது. யோசு. 1:1-2, **கர்த்தருடைய தாசனாகிய மோசே மரித்தபின்பு கர்த்தர் மோசேயின் ஊழியக்காரனான** (இந்த பயிற்சி தெய்வீக திட்டங்களையும் வழிமுறைகளையும் அவருக்கு அதிக பழக்கமுள்ளதாக்கியதுடன் மோசேயின் மூலம் புரிந்து கொள்ளச் செய்து பழக்கப்படுத்தவும் செய்யப்பட்டது) **நூனின் குமாரன் யோசுவாவை** (கிறிஸ்துவுக்கு அடையாளம்) **நோக்கி, என் தாசனாகிய மோசே மரித்துப் போனான்: இப்பொழுது நீயும் இந்த ஜனங்கள் எல்லாரும் எழுந்து** (சாந்த குணமுள்ளவராயிருந்ததால் தான் கர்த்தருடைய ஆணையைப் பெற்றுக் கொள்ளும்படி கர்த்தருடைய அங்கீகாரத்துக்கு காத்திருந்தார்.) **இந்த யோர்தானைக் கடந்து** (சபையின் விஷயத்தைப் பொறுத்த வரையில் அவர்கள் பாவநிலைமையிலிருந்தும், சீர்கெட்ட நிலைமையிலிருந்தும் தேவனுடன் இசைவுக்குள்ளாக) **இஸ்ரயேல் புத்திரருக்கு நான் கொடுக்கும்** (அவர்களுடைய தகுதியின் காரணமாக அல்ல, ஆனால் அவருடைய சொந்த திட்டத்தின்படி அவர்களிடமாக தம்முடைய தயவின் காரணமாகவே தருகிறார்.) **தேசத்துக்கு போங்கள்.** (யோசுவா, கர்த்தருடைய ஜனங்களை விடுவிக்கவும் வாக்களிக்கப்பட்ட தேசத்தை அவர்களுக்கு சுதந்திரமாக கொடுக்கிறவராகவும் இருந்தது போல, இயேசுவும், ஆவிக்குரிய இஸ்ரயேலரை விடுவித்து, அவர்களுக்கு சுதந்தரத்தை கொடுக்கிறவராய் இருக்கிறார்).

அடுத்ததாக நாம் யோசுவா 3:9-10 KJV வசனங்களை ஆராய்ந்து பார்ப்போம்: "**யோசுவா இஸ்ரயேல் புத்திரரை நோக்கி: நீங்கள் இங்கே சேர்ந்து, உங்கள் தேவனாகிய கர்த்தருடைய வார்த்தைகளைக் கேளுங்கள் என்றான். பின்பு யோசுவா: ஜீவனுள்ள தேவன் உங்கள் நடுவே இருக்கிறார். அவர்** (தவறாமல்) **உங்களுக்கு முன்பாக** ("பூமி கர்த்தருடையது" (சங். 24:1). அவர் தமக்கு சொந்தமான சம்பத்தைக் குறித்து தம்முடைய சித்தப்படி செய்ய உரிமையுள்ளவராய் இருக்கிறார்) **துரத்தி விடுவார்.** (கானானியரை வெற்றிபெற்று அழிப்பது பிரதிஷ்டை செய்தவர்களுடைய ஆவிக்குரிய போராட்டங்களைக் குறித்துக்காட்டுகின்றன). **அவர் கானானியரையும்** (இந்த ஜாதியார் விழுந்து போன சுபாவத்தின் பெலவீனங்களையும், அபூரணங்களையும் அடையாளப்படுத்துகின்றன. அவை ஆயிர வருட யுகத்தின் போது துடைத்துப் போடப்படும். R-3085:2 நாம் தைரியமாய் போராட வேண்டிய பாவங்களை அடையாளப்படுத்துகிறது. R 4064:2) **ஏத்தியரையும், ஏவியரையும், பெரிசியரையும் கிர்காசியரையும், எமோரியரையும், எபூசியரையும் உங்களுக்கு முன்பாக துரத்திவிடுவார்.**

பரந்த ஒரு நோக்கிலிருந்து பார்க்கும் போது, அந்த பழங்காலத்திய ஜனங்கள் அப்படி நடந்து கொண்ட சமயத்தில்

மரித்தது ஒரு ஆசீர்வாதமாக இருந்தது. ஒழுக்க நெறியில் தரம் குறைந்தவர்களாய் இருந்த அவர்களினால் அவர்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ எந்த பயனும் இல்லை; அவர்கள் அழிக்கப்பட வேண்டியவர்களாயிருந்தனர். அவர்கள் ஆயிர வருட யுகத்தின் போது துடைத்து அழித்துப் போட வேண்டிய விழுந்துபோன சுபாவத்தின் பெலவீனங்களையும், அபூரணங்களையும் அடையாளப்படுத்துகின்றனர்.

## யூதர்கள் சொந்த தேசத்தைப் பெற வேண்டியவர்கள்

யூதர்களுக்கான சொந்த தேசத்தை அளிப்பதற்கு இஸ்ரயேலின் அரசாங்கத்தின் மீது பலன்தரத்தக்க விளைவுகளைப் பெற்றிருந்த சில ஆவணங்களை நாம் கருத்தில் கொள்வோம். (Versailles) வெர்சாயில்ஸ் ஒப்பந்தம் இருமடிப்புகளைக் கொண்டது: **(1)** இந்த ஒப்பந்தம் 1783, செப்டம்பர் 3-ம் தேதி அமெரிக்க குடியேற்ற நாடுகளுக்கும், கிரேட் பிரிட்டனுக்குமிடையே கையெழுத்தாகி, அமெரிக்க புரட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது. முறைப்படி ஐக்கிய நாடுகளை (US) சுதந்திரமடைந்த தேசமாக ஏற்றுக் கொண்டது. **(2)** வெர்சாயில்ஸ் (Versailles) ஒப்பந்தம் ஜெர்மனி மற்றும் அதன் நேச நாடுகளால் ஜுன் 28, 1919 அன்று கையெழுத்திடப்பட்டு, முறைப்படி முதலாம் உலகப் போரை முடிவுக்கு கொண்டு வந்தது. அந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஜெர்மனி நிதி சம்பந்தப்பட்ட நஷ்ட ஈடுகளைக் கொடுக்க வேண்டும் என்றும், படைக்கலங்களை அகற்றுதல், ஆட்சி பிரதேசத்தை இழத்தல், அதன் வெளிநாட்டு குடியேற்றங்கள் எல்லாவற்றையும் விட்டுக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டன. அந்த ஒப்பந்தம் மத்திய அதிகாரங்கள் கொண்ட ஆட்சி பிரதேசங்களை மறுபங்கீடு செய்து ஜெர்மனியின் ஆயுதப்படைகளைக் கட்டுப்படுத்தி தேசங்களின் கூட்டமைப்பை ஸ்தாபித்தது.

உலகப்போர் முதலாம் கட்டம் நடந்து கொண்டிருந்த போது பிரிட்டனில் வெடி மருந்து தயாரிப்பில் பயன்படுத்தப்படும் கார்டைட் என்ற வெடி பொருள் தீர்ந்துவிட்டது. அப்பொழுது இருந்த பிரதம மந்திரி, திறமை வாய்ந்த ஒரு யூத வேதியியல் நிபுணரான Dr. சைம் வைஸ்மேன் Chaim Wiseman என்பவரிடம் உதவி கேட்டு வேண்டுகோள் விடுத்தார்; அவர் ஹார்ஸ் செஸ்ட்நட்ஸ் எனும் மரவகையிலிருந்து செயற்கை கார்டைட்டை உருவாக்கினார்.

பிரிட்டிஷ் அரசியல் தலைவரும் பிரதம மந்திரியும் 1917-ல் அயல்நாட்டு வெளியுறவு செயலாளராகவும் இருந்த என்டர் ஆர்தர் பால்ஃபர் (Enter Arthur Balfour) யூத தேசத்தக்கு சொந்த தேசத்தை ஆதரிக்கிற பால்ஃபர் பிரகடனத்தை (Balfour Declaration) வெளியிட்டார்.

400 வருடங்களாக அந்த நிலத்தை ஆக்கிரமித்து வந்த துருக்கியர்களை சரணடையச் செய்த பிறகு, 1917 டிசம்பரில் ஜெனரல் ஆலன்பே எருசலேமின் பொறுப்பை ஏற்றார். மே மாதம் 1920-ல் தேசங்களின் கூட்டமைப்பானது அந்த தேசத்தின் மீது இருந்த பிரிட்டனின் அதிகார உத்தரவை உறுதி செய்து உலகம் முழுவதுமுள்ள யூதர்கள் அவர்களுடைய சொந்த தேசத்துக்கு திரும்பி வரவும் வீடுகளைக் கட்டிக் கொள்ளவும் அங்கீகாரம் அளித்தது.

AD 640 முதல் 1960-ன் இடைப்பட்ட காலம் வரைக்கும் அரேபியர்கள் இந்த நிலத்தை தெற்கு சிரியா என்று குறிப்பிட்டனர். தேசங்களின் கூட்டமைப்பு 1922-ல் யூத ஜனத்திற்கான அந்த உத்தரவை நிறைவு செய்த போது, அந்த தேசத்திற்கான அதிகாரப்பூர்வமான பெயர் பாலஸ்தீனம் என்று மாறி 1948-ல் இஸ்ரயேல் தேசம் மறுபடியும் பிறந்து வந்தது வரை அப்படியே இருந்தது. அங்கே பின்பு ஐரோப்பாவிலும் பிரிட்டனிலும், மற்றொரு துன்புறுத்தலின் அலை எழும்பியது. 1939-ல் யூதர்கள் தங்களுடைய சொந்த தேசத்துக்கு செல்வதை தடை செய்யும் ஒரு வெள்ளை காகித அறிக்கை வெளியிடப்பட்டது. பிரிட்டன் யு.எஸ்.எஸ் எக்ஸோடஸ் (USS Exodus), கப்பலில் இருந்த நூற்றுக்கணக்கான யூத அகதிகளை ஜெர்மனிக்கு திரும்பும்படி கட்டாயப்படுத்தியது.

1878-ம் வருடத்துக்கு நாம் திரும்பிச் செல்வோமானால், புலம்பெயர்ந்தோர் சீர்திருந்துவதற்காக 1845 வருடங்கள் கால தண்டனைக் காலம் முடிவடைந்தது பற்றி அறிந்து கொள்ளலாம். இங்கிலாந்தில் அப்போதைய பிரதம மந்திரியாக இருந்த யூதரான பெஞ்சமின் டிஸ்ரேலி, தேசங்களின் பெர்லின் காங்கிரஸில் முக்கிய நபராக இருந்தார். பிரிட்டன் துருக்கியின் ஆசியப் பகுதியை பொதுவான கட்டுப்பாட்டிலுள்ள பகுதியாக ஏற்றுக் கொண்டு, 1917-ல் பாலஸ்தீனத்தின் மீது இருந்த துருக்கிய ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது.

PLO தலைவர் யாசர் அராஃபத் பாலஸ்தீனர்களின் விடுதலை பற்றி 1974-ல் ஐக்கிய நாடுகளுக்கு முன்பாக தம்முடைய பேச்சில் அந்த கோரிக்கையைத் தெரிவித்தார். 1881-ல் யூத கைப்பற்றுதல் ஏற்பட்ட காலத்தில் பாலஸ்தீனம் ஒரு பசுமையான பிரதேசமாக இருந்தது. முக்கியமாக அரபு மக்களால் குடியமர்த்தப்பட்டு அவர்கள் தங்கள் ஜீவியத்தை கட்டமைத்துக் கொள்வதிலும், தங்களுடைய தொன்று தொட்ட கலாச்சாரத்தில் மிகுந்த ஆற்றலுடன் மேம்பட்டிருந்தனர்!

*பசுமையான நிலை பற்றி:* தாவரங்கள் நிறைந்து பசுமையாயிருத்தல். *பூர்வீக குடி:* பழங்குடி அல்லது அசல். நாம் இந்த கோரிக்கையை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரங்களின் கூர்ந்து கவனித்தலுடன் ஒப்பிடுகிறோம். 1737-ல் தாமஸ் ஷா என்பவர் குடியிருப்புகள் இல்லாதிருந்த வறண்ட தரிசு நிலம் ஒன்றை கண்டறிந்தார். 1785-ல் கான்ஸ்டான்டைன் பிரான்கோயிஸ் டி.வால்னே என்பவர்

மூன்று முக்கியமான பட்டணங்களின் மக்கள் தொகையைப் பதிவு செய்துள்ளார்: எருசலேம் = 12 முதல் 14000 வரை, பெத்லகேம் = சுமார் 600 திடகாத்திரமான மனுஷர்கள், எபிரோன் = 8 முதல் 900 வரை. 1835-ல் அல்போன்ஸ்டி லாமார்ட்டின் எழுதியது : எருசலேம் பட்டணத்துக்கு வெளியே நாங்கள் எந்த ஜீவராசிகளையும் கண்டதில்லை. எந்த ஜீவராசிகளின் சத்தத்தையும் கேட்கவில்லை, பட்டணத்தில் முழுமையான அமைதியே ஆளுகை செய்து வந்தது, மொத்த ஜனங்களின் கல்லறையாகவே இருந்து வந்துள்ளது.

1857-ல் பிரிட்டிஷ் கவுன்சிலின் அறிக்கை: அந்த பிரதேசம் குறிப்பிடத்தக்க அளவுக்கு குடியிருப்பவர்கள் இல்லாமல் வெறுமையாயிருக்கிறது, அதனால், அதன் மிகப்பெரிய அவசியம் மக்கள் தொகை அமைப்பே ஆகும். இவைகளெல்லாம் இஸ்ரயேலின் தண்டனைக் காலம் மற்றும் சிதறடிக்கப்பட்டிருந்த காலத்தின் விளக்கமாகவே இருக்கின்றன.

வேதவாக்கியங்கள் என்ன சொல்கின்றன: கர்த்தர் சொல்லுகிறார். மனுஷனில்லாமலும், மிருகமில்லாமலும் அவாந்தர வெளியாய்க் கிடக்கிறதென்று நீங்கள் சொல்லுகிற இவ்விடத்திலும், யூதாவின் பட்டணங்களிலும், மனுஷனாவது மிருகமாவது இல்லாத பாழான எருசலேமின் வீதிகளிலும் சத்தம் கேட்கப்படும். (எரே. 33:10). 1919-ல் யூத பங்களிப்புகளும், யூத குடியேறுதலும் அந்த தேசத்துக்குள் தொடர்ந்து அதிகரித்து வந்தது. யூதர்கள் தொழிற்சாலை, வேளாண்மை, மருத்துவமனைகள் போன்றவற்றை நிறுவினர். ஆம் ஒரு முழுமையான சமூக பொருளாதார உள்கட்டமைப்பு வசதியை ஏற்படுத்திக் கொண்டனர். வேலை வாய்ப்புகள் பெருகியதால், அரேபிய குடியேற்றமும் அதிகமானது. பிரிட்டனின் 1939 வெள்ளை காகித சட்டம், யூதர்கள் தங்கள் சொந்த நாட்டுக்குள் குடியேறுவதற்கான வாசல்களை அடைத்துவிட்டன என்பதை நாம் நினைவில் கொள்கிறோம்.

1946-ல் ஒரு அமெரிக்க அரசாங்கபார்வையாளரான பார்ட்லே கிரம், ஆயிரக்காணக்கான அரபு மக்கள் தங்கள் சிறப்பான வாழ்க்கை வசதிக்காக பாலஸ்தீனத்திற்குள் பிரவேசித்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்! அதிக காலம் பிந்தி 1947 மே மாதம் 31-ல் அரபு பிரதிநிதிகள், பாலஸ்தீனம், சிரியாவின் ஆட்சி எல்லையின் ஒரு பகுதியாயிருப்பதாக ஐக்கிய நாடுகளுக்கு நினைவுபடுத்தினர். அரசியல் ரீதியாக பாலஸ்தீன அரபு ஜனங்கள் தங்களுக்கென்று தனியாக அரசியல் தனித் தன்மையை உருவாக்கும் அளவுக்கு சுதந்திரத்துடன் இல்லை.

சிரியாவின் அதிபர் ஹபீஸ் அசாத் ஒரு சமயம் PLO தலைவர் யாஸர் அராபத்திடம் இந்த ஒரு விஷயத்தை ஒரு போதும் மறந்து விடாதீர்கள் என்று கூறியுள்ளார். பாலஸ்தீன ஜனங்கள் என்று தனியாக ஒன்று இல்லவே இல்லை; நீங்கள் சிரியாவின் ஒருங்கிணைந்த பகுதியாயிருக்கிறீர்கள். PLO நிர்வாக குழுவின் அங்கத்தினரும் இராணுவ படைத்தலைவருமான ஜுனகர் முஹ்சின் (Zuhair Muhsin) என்பவர் ஜோர்தானியர்கள், பாலஸ்தீனியர்கள், சிரியர்கள் மற்றும் லெபனானியர்களுக்கிடையே வித்தியாசங்கள் எதுவும் இல்லை, நாமெல்லாரும் ஒரே தேசத்தின் பகுதிகளாயிருக்கிறோம் என்று சுட்டிக்காட்டியுள்ளார். ஒரு தனிப்பட்ட பாலஸ்தீன தேசத்தின் தோற்றம் தந்திரமான நோக்கங்களை மட்டுமே நிறைவேற்ற உதவுகிறது. பாலஸ்தீன மாகாணத்தை நிறுவுவது இஸ்ரேயலுக்கு எதிராக யுத்தத்தை தொடருவதில் புதிய கருவியாக இருக்கிறது.

யேகோவா தேவன் கொடுத்திருக்கிற அநேக வாக்குத்தத்தங்களில் ஒன்று எரே. 24:6,7-ல் காணப்படுகிறது: "**அவர்களுக்கு நன்மையுண்டாக நான் என் கண்களை அவர்கள் மேல் வைத்து அவர்களை இந்த தேசத்துக்குத் திரும்பி வரப்பண்ணி, அவர்களைக் கட்டுவேன், அவர்களை இடிக்கமாட்டேன், அவர்களை நாட்டுவேன், அவர்களைப் பிடுங்கமாட்டேன். நான் கர்த்தர் என்று அறியும் இருதயத்தை அவர்களுக்குக் கொடுப்பேன்: அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும், என்னிடத்திற்கு திரும்புவார்கள் என்று இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்.**"

ஆமோஸ் 9:15: அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன் நான் அவர்களுக்கு கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனி பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார். ஆம், இஸ்ரயேல் மட்டுமே பூமியின் மீது அழிக்கப்படவே முடியாத தேசமாயிருக்கிறது. அதன் தோற்றத்திலும் அது பாதுகாக்கப்பட்டு வருகிற விஷயத்திலும் அதன் வாக்களிக்கப்பட்ட குடியிருப்பு விஷயத்திலும் அது அற்புதமாகவே இருந்து வந்துள்ளது!


Visit us at : **www.biblestandardindia.com**

**For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact:**

**Laymen's Home Missionary Movement**



**Bro. V. Vincent Jeyakumar**

**[Representative of India]**

#4/81, Eluvaraimukki Main Road, Eluvaraimukki Post, Near Thoppur,
Nazareth - 628 617, Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincentlhmm@gmail.com; Cell : 98949 26629



**FOR PRIVATE CIRCULATION ONLY**